உரிமை பதிவு.

ஜோ.கெ.ட. ரெ.ட

மார்ச் 1952

Rm 21193, N51.5.5

199863

606

ஹிதபாஷிணீ

Vol. V. No. 5.] [March '52.

606
1.52

... OF THE ...
... 8 952
MADRAS

கர-ஹு மாசி-மீ

1. தசோபனிஷத் பிரசாரம் ... தலையங்கம் 1
2. கைவிடில் உன்னைப் பழிப்பேன் (திருவாசகம்) ... 4
3. ஹரிஹராபேதம் 9
4. ஹரிஹரஸ்தோத்ரம் 13
5. கேநோபனிஷத் 21
6. சக்வவேண மஹாராஜன் ... (சிறுகதை) 25
7. ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம் ... (நாடகம்) 33—36
8. ஸ்ரீ நாமராமாயணம் ... ...

வருட சந்தா ரூ. 3—0—0 பிரதி விலை அணா 5

ஆபீஸ் :- 1835 / 3, மேலவீதி, தஞ்சை.

விளம்பரம்.

"பக்தி, தர்மப்ரசாரம்" என இருமாதவெளியீடுகளுக்கு தனித்தனி வருஷசந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா 5. ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் ரூ. 1-4-0. பூர்வபாக பாகவதம் ரூ. 1-12-0. நித்யகர்மானுஷ்டான விதிகள் ரூ. 1. ச்ராத்த காண்டம் அணா 8. ஸ்திரீ தர்மம். அணா 8. வர்ணாச்ரம காண்டம், அணா 8. ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி அ-முதல் க-வரை ரூ. 7. அமரஸங்க்ரஹம் அர்த்தத்துடன். ரூ. 3. க்ரந்த தமிழ் அகராதி. ரூ. 4. வேதக் கதை கதைகள், கீதோபதேசம், ராமாயண ஸங்க்ரஹம், பாரத ஸங்க்ரஹம், லௌகிக ந்யாயங்கள், நீதி சாஸ்திரம், ஆசௌச காண்டம், ஸம்ஸ்கிருத பதார்த்த போதினீ (தமிழில்), ஜகத்குருக்களின் சரித்ரம், பதிவ்ரதைகள் சரித்ரம், மோக்ஷ வழி, பகவத்கீதா விசாரம், ஸந்த்யா, புருஷ ஸ்ரீஸூக்த ருத்ரசமக, தர்பண ச்ராத்தாதிகளின் பிரதிபதார்த்தம், தமிழ் ஸம்ஸ்கிருத அகராதி முதலியன வெளியாகும். எங்களிடம் இன்னும் பல நூல்களும் கிடைக்கும்.

நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்,
தக்ஷிணதேச க்ரந்தாலயம்,
கம்பரசம்பேட்டை போஸ்டு,
திருச்சி மார்க்கம்.

ஹிதபாஷிணீ வெளியீடுகள்.

1. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம்: மூலம் நாகரத்திலும் தமிழிலும், பதவுரை, கருத்துரையுடன் கூடியது.
2ம் பதிப்பு அணா 4.

2. அக்ஷர சகுனம்: தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புடன் கூடிய சிறந்த சகுன நூல்.
ரூ. 1—0—0.

3. ஸ்ரீராமசந்திரஸ்துதி: மூலம் தேவ நாகரத்திலும் தமிழிலும், தமிழ் மொழிபெயர்ப்புடன் கூடியது. அணா 3.

ஹிரிஹர ஸ்தோத்ரம், தாரித்ர்ய துக்கதஹனாஷ்டகம், மஹாமாயாஷ்டகம் முதலியவை அச்சில்

மானேஜர்,
"ஹிதபாஷிணீ", தஞ்சை.

கரூர் கட்டி வைத்திய நிபுணர்
வைத்திய வாசஸ்பதி
பண்டிட் P. S. ராம சர்மா அவர்களின்
நீண்டகால பரீக்ஷை அனுபவங்களால் கண்டுபிடிக்கப்பட்ட
கைகண்ட பலனளிக்கும்

"சக்தி ஸஞ்சீவி"

(Regd.)

குழந்தைகளுடைய குலேக்கட்டிகளை எந்நிலைமையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பவர்:

ஸ்ரீ சக்திவிலாஸ வைத்தியசாலா,
கரூர், S. I. R.

|| श्रीः ||

|| हितभाषिणी ||

தொகுதி 5	கர-ஹு மாசி-மீ	1952. மார்ச்சு	பகுதி 5

தசோபனிஷத் பிரசாரம்.

பரமகருணாமூர்த்திகளாயும் தீர்க்கதரிசிகளாயுமுள்ள நமது காஞ்சீகாமகோடி பீடாதிபதிகள் அவர்கள், 1–2–52 அன்று மாயவரத்திற்கு அடுத்த நாகங்குடி கிராமத்திலிருந்து வேதாந்த சாஸ்திரத்தைக் கற்றுணர்ந்த பண்டிதர்களுக்கெல்லாம், அடியிற் கண்ட ஓர் உத்திரவைப் பிறப்பித்தார்கள்.

"நாளது கரஹுூ மாகசுக்ல ஏகாதசி (6–2–52) முதல் பால்குனசுக்ல ஏகாதசி (7–3–52) வரை ஒருமாத காலத்திற்கு பிரதிதினம் காலையில் உபநிஷத் பாராயணமும், காலையிலோ, மாலையிலோ, இராத்திரியிலோ எப்பொழுது ஸௌகரியமோ அப்பொழுது காலையில் பாராயணம் செய்த வரை உபனிஷத் மந்திரார்த்தம் மட்டும் பிரவசனம் செய்ய வேண்டும். பாஷ்யத்தை முன்னதாகவே பார்த்துவைத்துக்கொண்டு பிரவசனம் செய்யுங்காலத்தில் அதிக விசேஷ விசாரங்களைச் சொல்லாமல் மந்திரார்த்தங்களைமட்டும் சொல்லவேண்டும். சுரோதாக்கள் 1-2 பேர்கள் இருந்தபோதிலும் மேலே குறிப்பிட்டகாலத்திற்குள் பத்து உபநிஷத்துக்களை முடித்துவிட வேண்டும்."

இந்த உத்திரவைப் பார்த்ததும் பல பண்டிதர்களுக்கு வியப்பும், சந்தோஷமும், கவலையும் மாறிமாறித் தோன்றியிருக்கலாம். இராமாயணம், பாகவதம் முதலியவற்றின் பிரவசனங்களையே ஜனங்கள் இதுவரை பெரிதும் விரும்பிக் கேட்டிருக்கின்றனர். பிரவசனம் செய்கின்றவர்களுள் பலர் அவற்றிலேயே பரிசிரமப்பட்டு பலரும் கேட்டு ரஸிக்கக்கூடிய ரீதியில் தயார்செய்து கொண்டிருக்கின்றனர். எதோ வருஷத்தில் ஒருதடவை அத்வைத சபை கூடுங்காலத்தில் உபனிஷத்பிரவசனம் என்பது சிலருடைய காதில் விழுந்திருக்குமல்லாமல் வேறு எங்கும் இம்மாதிரி பிரவசனம் கேள்விப்பட்டதேயில்லை. அப்படியிருக்க இதென்ன! எங்கும் அதிக பழக்கத்தில் இல்லாத ஓர் பிரவசனத்தை செய்யும்படி ஆஜ்ஞையேற்பட்டிருக்கிறதே? என்று ஆச்சரியம் ஒரு புறம்.

மற்றொரு புறத்தில் "இராப்பகலாக உழைத்து பல வருஷங்கள் பயின்ற அற்புதமான உபனிஷத் பாஷ்யங்களைப் பற்றி கேட்பாரில்லையே, நாம் கற்றதை பலருக்கு எடுத்துச்சொல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே" என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களுக்கு இந்தஆஜ்ஞை மிகுந்த சந்தோஷத்தை அளித்திருக்கக்கூடும். அதேசமயத்தில் இப்புனிதமான, ஆனால் மிகக்கடினமான ஆஜ்ஞையை நாம் சரிவர நிறைவேற்ற வேண்டுமே என்ற கவலையும் ஒருபுறமேற்பட்டிருக்கும்.

ஆனால் ஆசார்யாநுக்கிரஹ விசேஷத்தால் ஷடி உபனிஷத் பிரவசனம் தஞ்சை, திருச்சி, கும்பகோணம், மன்னார்குடி சென்னை முதலிய ஊர்களில் பலவிடங்களில் நடைபெற்று வருகிறது. தஞ்சையைப் பொருத்தமட்டில், இந்த உபனிஷத் பிரவசனம் மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. மற்ற விடங்களிலும் இவ்விதமே இருக்குமென்று நம்புகிறோம். நமது ஹிதபாஷிணி ஆசிரியர் மேலவீதி குஜிலியாள் கட்டிடத்தில் பிரதிதினம் காலை 9 மணிக்கு உபனிஷத் பாராயணத்தையும், இரவு 8 மணிக்கு ஷடி பிரவசனத்தையும் செய்துவருகிறார். வடக்குவீதி சங்கரமடத்தில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் ஷடி பாராயணபிரவசனங்களைச் செய்து வருகிறார்கள்.

மேலவீதியில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் அற்புதமான குஜிலியாள் கட்டிடத்தின் அமைப்பும், ஷடி கட்டிட நிர்வாஹிகளின் ஆசார்யபக்தியும், ஆஸ்திக்யமும் இம்மாதிரி உபன்யாஸங்களிலுள்ளவிருப்பமும், பொதுவாக உபனிஷத்துக்களின் உயர்ந்த தத்துவங்களை கேட்டு அறிந்துகொள்ள வேண்டுமென்று பல நாளாக ஆஸ்திகர்களுக்கு இருந்துவந்தஆவலும், எல்லாவற்றிற்கும் மூலமாக சரியான சமயத்தில் இந்த பிரவசனத்தை செய்யும்படி ஆக்ஞாபித்த ஆசார்யாளுடைய கருணையும், அருளும் எல்லாம் ஒன்றுசேர்ந்து இப்பிரவசனத்திற்கு ஓர் தனிப்பட்ட சோபையை அளித்திருக்கின்றன. பிரவசனத்திற்கு ஒன்று இரண்டுச்ரோதாக்கள் இருந்தாலும் போதுமென்ற ஆக்ஞை நூறு இருநூறு பேர்கள் இருந்தாலும் போதுமென்று கூறியது போல் காணப்படுகிறது.

இந்தப்பிரவசனத்தை கேட்டதும் இதேமாதிரி யோகவாஸிஷ்டம், பகவத்கீதை, பஞ்சதசபிரகரணம் பிருஹ்மசூத்திரம் முதலிய வேதாந்த நூல்களை பிரவசனம் செய்து கேட்கவேண்டுமென்ற ஆவல் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக "இம்மாதிரி உயர்ந்த [illegible] சுலபமாக அறிந்துகொள்ளும் பாக்யம் ஏற்ப[illegible] ஆசார்யாள் சரியான முறையில்

L99863

ஏற்பாடு செய்தார்களே" என்று நமது ஆசார்யாளை வாயார பலரும் வாழ்த்திக்கொண்டே இருக்கின்றனர்.

பண்டிதர்களைப் பொருத்தமட்டில், இம்மாதிரி சந்தர்பத்தை சரியானபடி பயன்படுத்திக்கொண்டு, பாஷ்யங்களையும் நன்கு பரிசீலனை செய்து பலரும் சுலபமாக அறிந்துகொள்ளும்படி எளியநடையில் பிரவசனம் செய்துவந்தால் காலக்கிரமத்தில் கேவல பௌராணிகர்களைவிட பல மடங்கு அதிகமாக போற்றப்படுவார்கள். அதுமட்டு மல்ல. உண்மையில் உலகமக்களுக்கு ஓர் சிறந்த உபகாரத்தைச் செய்தவர்களாகவும் ஆவார்கள். தைத்திரீயோபனிஷத்தில் "ஸ்வாத்யாயப்ரவசனேச" என்ற வாக்கியத்தில் "ப்ரவசனம்" என்பதை விளக்கும்போது ஆசார்யாள், **"ப்ரவசனம் ச தத3விஸ்மரணார்த்த2ம் த4ர்மவ்ருத்3தயர்த்த2ம் ச"** :"பிரவசனம், படித்ததை மறக்காலலிருப்பதற்காகவும், தர்மம் அபிவிருத்தியடைவதின் பொருட்டும் அவசியம செய்யப்படவேண்டும. என்று கூறியுள்ளார்கள்.

பலருக்கு உபனிஷத்தின் கருத்தை அறிந்து நாம் உஜ்ஜீவிக்க வேண்டுமென்ற எண்ணமிருந்தும், பலவித அசௌகரியங்களால் அது பூர்த்தியடைவதில்லை. ஸம்ஸ்கிருதத்திலும், இதர சாஸ்திரங்களிலும் பூர்ணபயிற்சியைப் பெற்று சாந்திபாட புரஸ்ஸரமாக ஓர்குருவிடம் உபனிஷத்தத்துவங்களை அறிந்துகொள்ள பலருக்கு தற்காலத்தில் வசதியே இல்லை. அதற்காக அந்த பொக்கிஷத்தை அவர்கள் இழக்கவேண்டியதுதான் என்று கூறுவதும் சரியல்ல. ஆதலால் அம்மாதிரியுள்ள ஆஸ்திகச்ரத்தாளுக்களுக்கு இந்தப் பிரவசனம் மிக்க பயன்படும். அதில் கொஞ்சம் ருசியை உண்டு பண்ணிவிட்டால் பிறகு முறைப்படி அதைக்கற்றுக்கொள்ள பலர் முயற்சிப்பார்கள். மேலும் உபனிஷத்தில் உள்ள பல அரிய தத்துவங்களைக் கேட்டு பலர் வாழ்க்கையில் திருந்தவும் கூடும்.

ஆதலால், ச்ரோதாக்கள் விருப்பம்பக்ஷத்தில் ஆங்காங்கு மற்ற புராண இதிஹாஸப் பிரவசனங்களைப்போல் இந்த உபனிஷத் பிரவசனத்திற்கும் முக்யத்வம் அளிக்கவேண்டு மென்பது நம்முடைய அவா. நமது ஹிதபாஷிணியிலும் இனிதொடர்ச்சியாக ஸ்ரீசாங்கரபாஷ்யத்தை அனுசரித்து உபனிஷத்துக்களின் கருத்தை வெளியிட குருசிஷ்யஸம்வாதரூபமான ஓர்வியாஸத்தை ப்பிரசுரம் செய்யத் தீர்மானித்திருக்கிறோம். ஈசாவாஸ்யோபனிஷத்தும், தைத்திரீயோபனிஷத்தில் ஒருபகுதியும் இதற்கு முன்பே வெளிவந்திருப்பதை நேயர்கள் அறிவார்கள். இந்த இதழில் கேநோபனிஷத் ஆரம்பமாகிறது. இதை நேயர்கள் தனியாக எடுத்து பைண்டுபண்ணிக்கொள்ளவும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

Rm 2113

"கைவிடின், உன்னைப் பழிப்பேன்."

ஸ்ரீமாணிக்கவாசகர்.

பக்தர்கள் ஈசனைப்போற்றுவதில் பலவிதமுண்டு. ஈசனுடைய பெருமைகளை எடுத்துரைத்தல் ஒருவிதம். அவரிடமுள்ள சலுகையால் அவரைத் தூற்றுவதுபோல் கூறி போற்றுவது மற்றொரு விதம். இம்மாதிரி ஸம்ஸ்கிருதத்தில் பல பாடல்களைக் காணலாம். தெய்வப்புலவரான ஸ்ரீமாணிக்கவாசகரும் இதேரீதியில் அடியிற்கண்டவாறு மனமுருகிப் பாடியிருக்கிறார்.

'உழைதருநோக்கியர் கொங்கைப் பலாப்பழத்தீயினொப்பாய்
விழைதருவேனை விடுதிகண்டாய் விடின் வேலை நஞ்சுண்
மழைதருகண்டன் குணமிலி மானிடன் றேய்மதியன்
பழைதரு மாபரனென்றென்றறைவன் பழிப்பினையே.'

இதன் பொருள்:- "இறைவனே? மான்களின் விழிகளையொத்த விழிகளையுடைய மாதர்களின், ஸ்தனங்களாகிற பலாப்பழங்களில் ஈக்கள்போல் இச்சைகொண்ட என்னை ('இவன் மிகக்காமாதுரன் எனக்கருதி) கைவிடப்போகிறீர்களா? அப்படியானால் நானும் தங்களை "வேலைநஞ்சுண் மழைதரு கண்டன்- கடலிலிருந்து உண்டான விஷத்தை உண்டதால், மேகம்போல் கருத்த கழுத்தை உடையவன், குணமிலி- குணமில்லாதவன், மானிடன்- மனிதனாகப்பிறந்தவன், தேய்மதியன்- அற்ப அறிவு உடையவன், பழைதருமாபரன்- கிழவியான உமையிடம் ஆசை கொண்டவன்" என்றெல்லாம் தங்களிடமுள்ள குற்றங்களை எடுத்துரைப்பேன். இவ்விதம் பொருள்கூறுவதால் ஈசனைத்தூற்றுவதுபோல் காணப்படினும், இதனின்றும் தோன்றும் மற்றொரு பொருள் ஈசனைப்பலவாறாகப் போற்றுவதாகவும் அமைந்திருக்கிறது. அதாவது:- ஏ ஈசா! தாங்கள் 'மழைதருகண்டன்' நீலமேகம் போன்ற கழுத்தை யுடையவன். "பாற்கடலினின்றும் உண்டான கொடிய விஷத்தைக்கண்டு உலகம் முழுவதும் அஞ்சி வேறு கதிஇல்லாமல் தவித்தகாலத்தில் அந்த விஷத்தை கையில் எடுத்து உட்கொண்டு வெளியிலுள்ள மக்களைக் காப்பாற்றியது மன்னியில், உதரத்திற்குள் சென்றுவிட்டால் அங்குள்ள பிராணிகள் நசித்துவிடும் எனக்கருதி கழுத்திலேயே அந்த விஷத்தை ஸ்தாபித்து எல்லாபிராணிகளுக்கும் அபயமளித்த மகான்தாங்கள் ஒருவரே" என ஸ்ரீபரமேச்வரனுடைய தனிப்பெருமையை இச்சொல் எடுத்துக்காட்டுகிறது. **குணமிலி**- 'நிர்குணன். எவ்வித குணங்களுமற்ற சுத்தஸ்வரூபன் தாங்கள். "**நிர்குணம் நிஷ்க்ரியம் சாந்தம்**" என்று உபனிஷத்துக்களால் போற்றப்பட்டவர்.

('தொடர்ச்சி 28 ம் பக்கம்')

மொழித்வேஷம் வேண்டாம்.

K. T. தியாகராஜதீக்ஷிதர், B. A. L. T.

தமிழ் நாட்டுச் செல்வர்களே! நாம் எவ்வளவு பாக்யவான்களென்பதை சற்று ஆலோசித்தீர்களா? நம் நாட்டுச்சிறப்புக்குஒப்பற்ற தமிழ்பாஷையே காரணம்! தமிழ்பாஷையில் பல அரிய நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. தேன்பலவியாதிகளைப் போக்கும்; தேன் மூலமே இன்ப முறையில் பல வியாதிகளை அடக்கும் முறைக்கு தேன்சிகித்ஸை என்று பெயர் (honeycure.) இவ்விதமே உலகத்தாரெல்லோருக்கும் பொதுவான ஓர் வியாதி பல துன்பங்களை அளித்து வருகிறது; கர்ப்பவாஸம்-பால்யத்தில் பல பிணிகள்-அடக்க முடியாத காமவேகம்-குடும்ப பாரம்-ஊழியத் தொழில்-இடைவிடா வேலை-கஷ்ட நஷ்டங்கள்-எளிமை-கைகூடாத எண்ணங்கள்-முதிர் வயதின் செயலற்ற தன்மை-கடைசியில் மரணம் இவ்வித-அளவற்ற துன்பங்களை உலகத்தாருக்கு அளித்து வரும் மஹத்தான வியாதி மண்ணுலகில் மானிட வாழ்க்கையே! இத்துன்ப வாழ்க்கையை வட மொழியில் ஸம்ஸார பந்தம் என்று கூறுவார்கள். இம் மஹத்தான வியாதியைப் போக்க நம் தமிழ் நாட்டில் தேனடைகள் போன்ற பல அரிய நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு உயர்ந்த நூலிலும் ஒன்று சேர்த்து அமைக்கப்பட்ட அளவற்ற தத்வங்களே அத் தேனடைகளின் இனிய தேனும்! எப்படிவியாதிக்குத்தக்கபடி தேன்சிகித்ஸையில் பல மருந்துகள் தேனோடு கலக்கப்பட்டு, எவரும் இன்பமாய் அருந்தும் முறை அனுஸரிக்கப்பட்டு வருகிறதோ, அவ்விதமே அவ்வபூர்வ விதவித நூல்களை இயற்றியுள்ள பரோபகாரிகளான ஆத்மாக்களே தத்வங்களின் சுவையை அறிந்து-சுறு சுறுப்புடன் ஆங்காங்கு ஸநாதனமாய் சிதறிக்கிடக்கும் தேன்போலுள்ள உண்மைகளை ஒன்று சேர்த்து அவைகளின் சுவையை அனுபவத்தில் உணர்ந்து-பிறரும் அச்சுவைகளை அருந்தும் பொருட்டு இடைவிடாது பாடு பட்டு வந்த தேனீக்களேயாம்! தங்கள் தங்கள் அனுபவத்தையும்-ஆராய்ச்சியையும்-இயக்கத்தையும்-உணர்ச்சியையும் அத் தேன் திவலைகளோடு கலந்து ஒப்பற்ற தேனைச் செய்து அபூர்வ பல நூல்களை இயற்றியுள்ளார் அப்பெரியோர்கள். உதாரணமாக:— (1) தமிழ் நாட்டு மக்கள் நீடூழி வாழும் பரோபகார சிந்தனையுடன், தமிழ் வைத்யசாஸ்திரத்தைச் செய்தவர் அகஸ்த்யமுனிவர். ஸம்ஸ்க்ருத பாஷையில் அபாரபாண்டித்யமுள்ள அகஸ்த்யபகவான், தமிழ் பாஷைக்குச் சிறப்பையும்-தமிழ் மக்களுக்கு தீர்க்க ஆயுளையும் கருதியே, அந்நூலை அவர் இயற்றியுள்ளார். அவருக்கு திராவிடர்-ஆர்யர் இவர்களிடம் ஸமமான அன்பு. ஒருவரை சிறப்பித்து-மற்றொருவரை வெறுக்கவில்லை. (2) அதே அகஸ்த்யர், பக்திமான்களான ஞான ஸம்பந்தர் அப்பர் - ஸுந்தரமூர்த்தி நாயனார் இவர்களால் பாடல் பெற்ற க்ஷேத்ரங்களில் பாடி அறங்கேற்றப்பட்ட தமிழ் பாடல்களின் ஆழ்ந்தபக்திச் சிறப்பை உணர்ந்து, ஆர்யரும் உணரும் வண்ணம் அவ்வெல்லா பாடல்களையும் ஸம்ஸ்க்ருதத்தில் சுருக்கமாய் மொழிபெயர்த்து, இ-வர்களின் சரித்திரத்தை 'சிவபக்த விலாஸம்' என்கிற ஸம்ஸ்க்ருத

க்ரந்தத்தை ஹரிசர்மா என்கிற பக்தர்மூலம் தமிழ்நாட்டு ஆர்யர்கள் பக்தி மார்க்கத்தால் கடைத்தேறும் வண்ணம் வெளியிட்டிருக்கிறார். (3) அவ்விதமே உபமன்யு என்கிற பரமசிவபக்தர் 63-வரின் சரித்திரத்தை ஸம்ஸ்க்ருதத்தில், ச்லோகங்களாகச் செய்த பாடல்களோடு இயற்றி, ஸ்ரீகைலாஸத்தில் பார்வதீ பரமேச்வரருடைய ஸன்னிதானத்தில் முனீச்வரர்களுக்கு உபதேசித்தாரென்றால், தமிழ்நாட்டு பக்தர்களுக்கும்-அவர்கள் பாடிய பாடல்களுக்கும் கைலாஸநாதனே உயர்வளித்திருக்கிறார் என்கிற விஷயத்திலிருந்தே, ஆர்யர் தமிழ்நாட்டையும் தமிழ் பாஷையையும், பரஸ்பரத் வேஷமின்றி போற்றிவந்திருக்கிறார்களென்கிற உண்மைவெளியாகிறது. வாஸ்தவப் பெரியோர்கள் சிறந்த உண்மைகள் எந்த பாஷையிலிருந்தாலும். அவைகளைத்தேனீக்கள் போல் சேகரித்து, தாங்களும் உணர்ந்து-பிறரும் அறிந்து-தங்கள் பிறப்பை சிறப்பித்துக் கொள்ளும்படி எல்லோரின் ஹிதத்தைத்தேடுபவர்கள். ஸ்வயநலக்காரர்களுக்குத்தான் 'ஆர்யர் திராவிடர்களைக் கீழ்ப்படுத்தி இருக்கிறார்கள்' என்கிற வேற்றுமை பூதக்கண்ணுக்குப் புலப்படும்! ஒற்றுமையாயிருந்த நிலை கண்ணுக்குப் புலப்படாது. தன் கண்ணில் ரோகமுள்ளவனுக்கு ஒரு சந்த்ரமண்டலம் பல மண்டலங்கள் போல் தப்புத் தோற்றம் தோன்றவில்லையா? அது போல் தான் (3) அந் நாள்களில் எல்லோரும் தத்வஅறிவில் ஆவலுள்ளோர்களாய் இருந்ததால், ஆர்யர் தமிழரிடமிருந்தும்-தமிழர் ஆர்யரிடமிருந்தும் விஷயங்களைக்கற்று, த்வேஷபுத்தியின்றி, எல்லோரும் உய்யும் வண்ணம் சாச்வதநூல்களைச் செய்தார்கள் திருவள்ளுவர் செய்துள்ள திருக்குறள் இவ்வித ஸமரஸத்தன்மைக்கு அத்தாக்ஷியாகும் அந்நூல் ஓர் அபூர்வ அறிவு செல்வக்களஞ்சியமாகும். அவர் நாளுக்கு முன் நீதி முதலிய என்னென்ன உண்மைகள் மனிதனை உயர்விக்குமோ அவ்வெல்லாவற்றையும்-தன் அறிவு அனுபவத்தோடு சேர்த்துப் பகுதிபகுதியாய் பிரித்து உபதேசித்துள்ளார். இவருக்கு சான்றோரான அந்தணர்-பதிவ்ரதைகள்-பசுக்கள் இம்முதலியவர்களிடம், தெய்வத்திற்கு ஸமமான மதிப்புண்டு. அவர்களைவிட தான் அறிவில் சிறந்தவராயினும், தற்புகழ்ச்சியின்றி பிறரைப்போற்றி, தன்புகழைப் பெருக்கிக்கொண்டார் சான்றோரான அந்தணர் எக்காலத்திலும் சிலரேனும் இருக்கவே இருப்பார். அப்படி இருக்க ஓர் இனத்தாரை அடியோடு நிந்திப்பது நியாயமாகுமா? மனிதர்களை நிந்தித்தாலும், அந்தணத்தன்மையையே வெறுப்பது பகுத்தறிவுள்ளோருக்கு அழகல்ல. த்வேஷமென்கிற துர்குணக்கலர்க்கண்ணாடியைக் கண்ணில் போட்டுக்கொண்டுவிட்டால், நற்குணமுள்ள வஸ்துக்களே உலகிலிருப்பதாய்த் தோன்றாது. திருக்குறளுக்கு எதனால் சிறப்பு? பரந்த நோக்கம்-பிறர் நலனை நாடுதல்-தர்ம சிந்தனை-தெய்வபக்தி-நீதிநெறிநாட்டம் இம்முதலியவைகளாலல்லவா அந்நூலுக்கு மதிப்பு! அந்நூலில் பராதூஷணம்-தற் புகழ்ச்சி-வேற்றுமை வளர்ப்பு-நாஸ்திக்யம் இவ்விதமாக சிறிதளவு இருப்பினும், அது அறிவுள்ளவர்களால் கௌரவிக்கப்பட்டு வந்திருக்குமா? (4) கவி கம்பர் ஸ்ரீமத் ராமாயணத்தில், தன் கவி சாதுர்யத்தைப்பல இடங்களில்

காட்டும் திறமைவாய்ந்தவராயினும் ஸ்ரீமத் வால்மீகியைப் போற்றி இருக்கிறார். அவருடைய ராமாயணத்தில் தெய்வபக்தி ததும்பி நிற்பதால், நாஸ்திக சிரோமணிகளுக்கு அதுபொருக்கவே இல்லை. கம்பராமாயணத்தையே பொசுக்கிவிடத் தலைப்படுகிறார்கள்! இவ்விதத்வேஷிகளுக்கு த்ராவிடஸ்தான் கையில் சிக்கிவிட்டால் ராவணராஜ்யம் திரும்பிவந்துவிடும்! தமிழ் நாட்டின் அரிய நூல்கள் பிறர் ஹிதத்தையே தேடுபவை. ஆகையால் அவைகளுக்குச் சிறப்பு (5) தாயுமானவர் தன்னுடைய ஆத்மானந்த அனுபவத்தையும்-ஈச்வர பக்தியால் தன் மனம் இளகி-உருகி ஈசனுடன் ஈடுபட்டிருந்த நிலையையும், ஸம்ஸ்க்ருத பாஷையின் உபநிஷதர்த்தங்களோடு இசைத்து' வாஸ்தவானுபவமுள்ள அவர், தனியேகளித்து-தனியே அனுபவித்து ஆத்மஸ்வரூபத்தை அடையாமல், அக்ஞர்களையும் கைதூக்கிவிடும் பொருட்டுப்பாடுபட்டுத் தன் அருமைப் பாடல்களை உலகத்தாருக்கு ஒப்பற்ற வழி காட்டியாக வைத்து விட்டுப் போயிருக்கிறார். உலகத்தை மறந்து ஏகாந்தத்தில் தன் அனுபவானந்தத்தைத்தான் மாத்திரம் பகராமல், அவ்வானந்தத்தேனை எல்லோரும் அடையும் பொருட்டு, ஸமாதியிலிருந்து வெளிவந்த ஸமயங்களிலெல்லாம் பாடல்களை வெளிப் படுத்தி, ஆத்மஞானமாகிற, ஸம்ஸாரரோகத்திற்கு இசைந்த வைராக்யக் கசப்பு மருந்தை தெய்வபக்தியாகிற இனிய தேனுடன் கலந்து, அனைவரையும் ஸம்ஸாரரோகத்திலிருந்து விடுவிக்க வந்துள்ள, ஸாக்ஷாத்தாயுமான செல்வமல்லவா அவர்! இம்மஹான் மூலம், வேதாந்த விஷயத்தைக் கற்பிக்கும் இனிய முறை தமிழ் பாஷை ஒன்றில்தான் அமைந்துள்ளது என்கிற உயர்வு தமிழர்களுக்கு சாச்வதமாய் ஏற்பட்டிருக்கிறது. (6) ஒவ்வொரு பாஷையிலும், ஸம்ஸ்க்ருதம் முதலிய வேறு பாஷைகளின் சொற்கள் சேர்ந்திருந்தாலும், தனிமையாய்த் தனக்குத்தானே புதிய சொற்களை உண்டுபண்ணிக்கொள்ளும் திறமை இயற்கையிலேயே அமைந்துள்ளது. இல்லாவிடில் அது எப்படி தனித்த இருப்புள்ள பாஷையாய்இருந்திருக்க முடியும்? நம் தமிழ் பாஷைக்கு அவ்வித தனித்த ஸாமர்த்யமுண்டு. சங்கத் தமிழன் சிறப்பிலிருந்தே அதன் தனித்த திறமை விளங்குகிறது. ஏறக்குறைய அவ்விதமே வைஷ்ணவ தமிழ் வேதமாகிற ப்ரபந்தங்களும், ஆழ்வார்கள்-ஆண்டாள் இவர்கள் பாடியுள்ள பாடல்களும் தமிழின் தனித்திறமையை தெளிவபடுத்துகின்றன. 1946—12—26-ல் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில், நாமக்கல் கவி ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளையவர்கள், "எந்த தேச மொழியும் கலப்பில்லாத தனி மொழியாக இருக்க முடியாது. ஆகையால் வடமொழி கலப்பில்லாவிட்டாலும், தனித்தமிழ் ஒன்றும் இருந்ததில்லை. நம்மில்சிலர், பார்ப்பனர்களை எங்கிருந்தோ வந்துவிட்ட 'ஆர்யர்களென்றும்' மற்றத் தமிழர்களை, திராவிடர்கள் என்றும் பிரித்துக் கூறி, வளர்த்து வரும் மனக் கசப்பை, மாற்ற முயற்சிக்க வேண்டும். ஆர்யர் யாரோ. திராவிடர் யாரோ இந்த உண்மையை அறியவே முடியவில்லை" என்று கூறியுள்ளார். மேலும் 1947—1—24-உ-யில் கும்பகோணம் ஸ்ரீ சங்கராசார்ய

ஸ்வாமிகள் செய்துள்ளப் பிரஸங்கத்தில், 'ஆர்யன்-த்ராவிடன்-ஸெமிடிக் என்பவர் வெவ்வேறு பிரிவினரென்று கூறுவதெல்லாம் கிருஸ்தவ மிஷனரிகளின் பிளவுக்கான விதை வேலையேயாம்.' என்று நிர்ணயித்துள்ளார். இவ்விரண்டு விஷயங்களையும் கும்பகோணம் வாரப்பத்ரிகை 'ஆர்யதர்மத்தில்' காணலாம். ஸ்ரீராமலிங்கம் பிள்ளையின் அபிப்ராயத்தில் தமிழ் பார்ப்பனருக்கு ஸம்ஸ்க்ருத பாஷாஞானம் நன்கு இருந்து வந்தது என்று தெளிவாகிறது. இவ் வுண்மைகளைத் தெரிந்து கொண்ட பிறகாவது, 'நம்மவர்-அவர்-இவர், அங்கிருந்து வந்தவர்-இங்கேயே இருந்தவர்! என்கிற வேற்றுமை விவாதத்தில் இறங்காமல் தமிழ் நாட்டில் உள்ள நாம் முதன்மையாக தமிழரே என்றுஉணர்ந்து, மேற்கூறிய அரிய தமிழ் நூல்களின் அறிவுக் களஞ்சியத்தைத் திறந்து, அத்தேனை உண்ண அத்தேன் முறை மூலம் ஸம்ஸார பந்தத்தை நிவர்த்தித்துக் கொள்ள நிச்சயம் செய்ய வேண்டியது அவரவரின் கடமையாகிறது. ஆகையால் பார்ப்பனரல்லாத தமிழர் ஞானக் கண்ணைத் திறந்துவிடும் ஸம்ஸ்க்ருதத்தைக் கற்றும்-கற்பிக்கத் தகுந்த ஸௌகர்யங்களை பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்திக் கொடுத்தும்-ஆதரித்தும்-வளர்த்தும் வர வேண்டும், அத்துடன் மேற்கூறிய அரிய தமிழ்நூல்களை ஆழ்ந்து கற்கவேண்டும். அவ்விதமே தமிழ் பார்ப்பனரும் தங்கள் இயற்கைக்கு இசைந்த ஆத்மஞானம் வரையில் எல்லா ஞான-விஞ்ஞானங்களுக்கு மூல உதவியான ஸம்ஸ்க்ருத பாஷையை (பலஅசௌகர்யங்களிருப்பினும் அவைகளைப் பொருள் படுத்தாது) இளமையிலிருந்தேகற்று-கற்கச்செய்து, தங்கள் முதிர் தாயான ஸம்ஸ்க்ருத பாஷையை வாழ்க்கைக் கடமை என உணர்ந்து, கற்கவேண்டும். அத்துடன் அரிய தமிழ் நூல்களின் தொகுக்கும் திறமையையும்-இனிமையையும் ஆராய்ந்து-அறிந்து வாஸ்தவத் தமிழ் மக்களாகத் தங்களை செய்து கொள்ள வேண்டும். இவ்வித ஸமரஸ முறைதான், தமிழ் மக்களின் இடையே பிளப்பு ஏற்படாமல், ஐக்யமாய் வாழும் முறை (7) இத்தமிழ் தேசத்தில் வெகுகாலமாக. ஸம்ஸ்க்ருத க்ரந்தலிபி (சப்தங்களை எழுதும் முறை) இருந்து வருகிறது. இந்த லிபியில் தான், கடவுளின் ஸ்ருஷ்டி ரஹஸ்யங்களும்-அகில ஜீவகோடிகளின் இனங்களும்-அவர்களின் பொதுஸ்வபாவங்களும் சித்திரூபமாய் நின்று-ஸகுணப்ரம்ஹத்தின் அகில சக்தியையும் தெளிவு படுத்தி வரும் ஓங்காராக்ஷரம் விளக்கி வருகிறது. ஆனால் க்ரந்தலிபியில் உள்ள எழுத்துக்கள் கற்க சற்று கடினமானவை ஸம்ஸ்க்ருதத்தில் அனாதியாய் உள்ள பல கடினசப்தங்கள் ஒதுக்கப்பட்டு-பல எழுத்துக்களின் கடின உருவங்கள் எளிது செய்யப்பட்டு தமிழ் பாஷையின் தனித்திறமையால்சில நூதன சப்தங்களும்-அவைகளின் நூதன லிபிகளும் சேர்ந்து, தற்காலதமிழ்பாஷையின் லிபியாக(எழுத்துமுறையாக) இருந்துவருகிறது. ஆனால் தற்காலம் பார்ப்பனர்களால் கூட க்ரந்தலிபி ஆதரிக்கப்படாமல் மறைந்து போகும் நிலைமைக்கு வந்துவிட்டது. இப்பிராசீன உயர்ந்தலிபி அடியோடு அழிந்து போகாவண்ணம், சிறுவர்களுக்கு கற்பிக்க வேண்டியது நமதுகடமை.

ஹரிஹர அபேதம்.

2

ஒரே நூலில் ஓரிடத்தில் சிவனே சிறந்தவரென்றும் மற்றொரு இடத்தில் விஷ்ணுவே சிறந்தவர் என்றும் கூறியிருப்பதை கவனித்தால் இருவர்களுடைய தத்துவமும் ஒன்று என்பதுதான் வெளியாகிறது. இருவர்களுடைய தத்துவங்களும் உண்மையில் வேறாக இருந்தால் அந்த கிரந்தகர்த்தா முன்னுக்குப்பின் விரோதமாக எழுதியிருக்கிறார் என்று சொல்லவேண்டி வரும். அது சரி அல்ல. முன் இதழில் குறிப்பிட்டபடி இராமாயணத்தில் ஓரிடத்தில் விஷ்ணுவே சிறந்தவரென்றும் மற்றொரு இடத்தில் சிவனே சிறந்தவர் என்றும் கூறப்பட்டிருப்பதிலிருந்து மகாகவி வால்மீகியும் இருவருடைய தத்துவமும் ஒன்று என்று அபிப்ராயப்பட்டு இருப்பதாகத் தெரியவருகிறது.

இரண்டும் ஒன்றாக இருந்தால் சில விடங்களில் ஒன்றை மட்டும் புகழ்ந்து பேசுவதற்கும், அப்படிப்பேசுகையில் மற்றொன்றைக்குறைத்துப் பேசுவதற்கும் காரணம் என்ன? என்ற சங்கை ஏற்படலாம். இதற்கு "उत्कर्षादिप्रतिपादनं कार्याधिक्यम्' என்ற சமாதானத்தைப் பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். அதாவது சுருதிஸ்மிருதி இதிஹாஸ புராணம் முதலியவை ஆங்காங்கு சிவவிஷ்ணு அபேதத்தை நிரூபித்தபோதிலும் எந்த இடத்தில் எந்த மூர்த்தியால் காரியம் ஆகவேண்டுமோ, அவ்விடத்தில் அந்த மூர்த்தியைப் புகழ்ந்து பேசுவது என்ற அதிகப்படியான விஷயம் ஒன்றும் ஆங்காங்கு நூல்களில் காணப்படுகிறது. ஒருவனிடம் பல நற்குணங்கள் இருப்பினும் எந்த சந்தர்ப்பத்தில் எந்த குணத்தால் காரியம் நடைபெற வேண்டுமோ அதைமட்டும் புகழ்ந்து பேசுவதுதான் உசிதம். ஒருவன் போர் வீரனாக தேர்ந்தெடுக்கப்படவேண்டிய தருணத்தில் அவன் "பலிஷ்டன், தைர்யசாலி" முதலிய போர் புரிவதற்கு தகுதியான குணங்களைமட்டும் விரிவாக எடுத்துக்கூறவேண்டும். மற்றும் பல அரிய குணங்கள் அவனிடமிருப்பினும் அவற்றை எடுத்துக்கூற அது சந்தர்ப்பமல்ல இராமாயணத்தில் "அதிகம் மேனிரே விஷ்ணும்" என்று அந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீவிஷ்ணுவைப் போற்றி இருப்பதின் நோக்கம் அடியிற்கண்டவாறு:-

ஸ்ரீராமன் வைஷ்ணவ வில்லால் சகல இராக்ஷஸர்களையும் வதம் செய்யப்போகின்றார். ஆதலால் அந்த வில்லை அப்பொழுது புகழவேண்டும். வில்லுக்குப் பெருமை வில்லைதரித்த விஷ்ணுவின் பெருமையால்தான் என்ற காரணம் பற்றி அங்கு விஷ்ணுவே மேலானவரென்று போற்றப்படுகிறார். இவ்விஷயம் இராமாயணத்திலேயே இதற்குமேலுள்ள சுலோகங்களால் வெளியாகிறது

ஸ்ரீராமரிடம் பலராமர் கூறுகிறார்." அக்காலத்தில் ஸ்ரீவிஷ்ணுவின் ஹுங்காரத்தால் அசைவற்றிருந்த சிவன் மறுபடியும் கோபங் கொண்டு யுத்தம் செய்ய முயற்சிக்கையில் தேவர்கள் அவரை சமாதானப்படுத்தி அவர் கையிலுள்ள வில்லை வாங்கி மிதிலாதிப னை தேவராதனிடம் கொடுத்தார்கள். அந்த வலிமையற்ற வில்லை இப்பொழுது நீ முறித்தாய். இதனால் நீ பலசாலி என்று சொல்ல முடியாது. இதோ என்கையில் இருக்கும்வில் ஸ்ரீவிஷ்ணுவினுடை யது. அக்காலத்தில் இந்த வில் ருசீகர் என்ற மகரிஷியிடம் அடைக்கலமாக வைக்கப்பட்டது. அவர் என் தகப்பனாரிடம் கொடுத்துவைத்திருந்தார். நான் அந்த வில்லைக்கொண்டு இருபத் தோருதடவை இப்புவியிலுள்ள க்ஷத்திரியர்களை எல்லாம்வென்று பூமண்டலம் முழுவதையும் பெற்று அதை ஓர்யஜ்ஞத்தில் காச்யப மஹரிஷிக்கு தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டு மஹேந்திரமலையில் தவம்செய்து கொண்டிருக்கையில் ஆகாயமார்க்கமாகச்செல்லும் தேவர்கள் ஸ்ரீபரமேச்வரதனுஸ்ஸை முறித்த உன்னைப் புகழ்ந்து பேசியதைக்கேட்டு ஆச்சரியமடைந்து "மிக்க பலமுள்ள இந்த வைஷ்ணவ வில்லை நீ ஆரோபணம் செய்து விட்டால் மிக்க பலசாலியாகத்தான் இருக்கவேண்டும். அப்பொழுது உன்னுடன் நான் யுத்தம் செய்யலாம்" என்ற எண்ணத்துடன் இங்கு வந்து சேர்ந்திருக்கிறேன்."

இதனால் அக்காலத்தில் விஷ்ணுவைப்புகழவேண்டிய அவசிய மானதால் "விஷ்ணுவே பெரியவர்" என்று கூறப்படுகிறது. ஒருவரைப் புகழ்ந்து பேசும்பொழுது மற்றொருவரை இகழ்ந்து பேசுவதுஎன்பது இயற்கை. இம்முறை வேதத்திலேயே காணப் படுகிறது. இதை அனுசரித்தே புராணங்களும், ஆங்காங்கு விஷ்ணுவைப்புகழும்பொழுது சிவனைக்குறைத்தும் சிவனைப்புகழும் பொழுது விஷ்ணுவைக் குறைத்தும் பேசுகின்றன. அவற்றிற்கு உண்மையில் சிவனையோ அல்லது விஷ்ணுவையோ குறைத்துப் பேசும் நோக்கம் கிடையாது. ஒருவரைப்பற்றி பேசுங்கால் அவருடைய புகழ்வளம் பெற்று விளங்கவேண்டுமென்பதற்காக மற்றவரைப்பற்றி அங்கு குறைத்துப் பேசப்படுகிறது அல்லா மல் மற்றவர்மேல் உண்மையில் குறைகூற வேண்டுமென்ற எண்ணத்தால் அல்ல. இதற்கு ஸம்ஸ்கிருதத்தில் நஹிநிந்தாந் யாயம் என்று பெயர்.

"नहि निन्दा निन्द्यं निन्दितुं प्रवर्तते अपितु स्तुत्यं स्तोतुम् ॥" என்பது இந்த நியாயத்தை விளக்கும் வாக்கியம். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் அடியிற்கண்ட சுலோகத்தில் இவ்விஷயத்தைவிளக்கிக் கூறியுள்ளார்கள்.

शिवं विष्णुं वा यद्यभिदधति शास्त्रस्य विषयं
तदिदं ग्राह्यं नः सगुणमपि तद्ब्रह्म भजताम् ॥
विरोधो नातो च स्फुरति नहि निन्दानयविदां

"சிவவிஷ்ணு அபேதத்தை அங்கீகரிக்கும் அத்வைதிகளுக்கு சிவனோ அல்லது விஷ்ணுவோ, யார் சாஸ்திரதாத்பர்ய விஷயமா னாலும் அவ்விஷயத்தில் விவாதமில்லை" என்று இதன் பொருள்.

विष्णुर्वा शङ्करो वा श्रुतिशिखरगिरामस्तु तात्पर्यभूमि-
र्नास्माकं तत्रवादः प्रसरति किमपि स्पष्टमद्वैतभाजाम् ॥

ஆக சிவவிஷ்ணு அபேதத்தை அங்கீகரிப்பதில் நியாய விரோதமில்லை என்று ஏற்பட்டது. இனி சுருதிஸ்மிருதி இதி ஹாஸ புராணங்கள் எல்லாம் ஹரிஹராபேதத்தையே நிரூபணம் செய்கின்றன என்பதை எடுத்துக்காட்டுவோம்.

சிவோத்கர்ஷத்தையோ அல்லது விஷ்ணு உத்கர்ஷத்தையோ நிரூபணம் செய்வதற்காக சென்ற இதழில் எடுத்துக்காட்டப் பட்ட சில உபாக்யானங்களிலேயே சிவவிஷ்ணு அபேதத்தைக் கூறும் சில சுலோகங்கள் காணப்படுகின்றன. விஷ்ணு புராணத் தில் விஷ்ணு உத்கர்ஷத்தைக்கூறும் பாணாஸுர யுத்தப்பிரகர ணத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் பரமேச்வரனிடம்.

योऽहं सत्वं जगच्चेदं सदेवासुरमानुषम् ।
अविद्यामोहितात्मानः पुरुषा भिन्नदर्शनः ॥

"நான்தான் தாங்கள், தாங்கள்தான் நான், இவ்வுலகம் முழுவதுமே நாம்தான் அவித்யையால் மோஹங்கொண்டவர் களே "நான் வேறு, தாங்கள் வேறு இவ்வுலகம் வேறு" என்ற பேதத்தைக் காண்கின்றனர். என்று சொல்லுகிறார். இவ்விதமே ஹரிவம்சத்திலும் இதே பிரகரணத்தில் பிருஹ்மா பரமேச்வர னிடம் கூறுகிறார்.

नच युद्धं महाबाहो तव कृष्णेन रोचते ।
नावबुध्यसि कृष्णं त्वमात्मानं च द्विधाकृतम् ॥

"ஏபரமேச்வர! கிருஷ்ணனோடு தாங்கள் யுத்தம் செய்வது சரியல்ல. கிருஷ்ணன் வேறு, தாங்கள் வேறா? ஒரேதத்வம் கிருஷ்ணன் என்றும் தாங்கள் என்றும் இரண்டாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தாங்கள் அறியவில்லை போலும்" இவ்விதம் கூறப்பட்ட பரமேச்வரன் இவ்வுலகம் முழுவதையும் தன்னையுங்கூட ஸ்ரீ கிருஷ்ணனின் உடலில் இருப்பதாகக் கண்டார். பிறகு ஸ்ரீ கிருஷ்ணனும் பரமேச்வரனும் ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு களித்தனர்.

மஹாபாரதம் த்ரோணபர்வத்தில் சதருத்ரீயம் என்ற பிரகரணத்தில் வியாஸரிடம் அர்ஜுனன் கேட்கின்றான். "போர்களத்தில் நான் எனது பாணங்களால் எதிரிகளை அடித்துக் கொண்டிருக்கையில் என் முன் ஓர் புருஷவடிவம் நெருப்புப் போல் ஜ்வலித்துக்கொண்டு செல்லுவதை நான் காண்கிறேன். அவன் கையில் ஓர் சூலம் இருக்கிறது. எந்தத்திக்கை நோக்கிச் செல்லுகின்றானே அந்தத்திக்கிலுள்ள என் எதிரிகள் எல்லோரும் மடிந்து கீழே விழுந்து விடுகின்றனர். அவ்விதம் கீழே விழுந்தவர்கள் மேல்தான் நான் எனது பாணங்களை வீசுகிறேன். பார்க்கின்றவர்கள் நானே அவர்களைக் கொன்றதாகக் கருதுகின்றனர். அப்படி என் முன்சென்று எனக்குஉதவிபுரியும் புருஷோத்தமன்.

வியாஸர்யார்? அவர்தான் ஸ்ரீபரமேச்வரன். ஜயத்ரதவதகாலத்தில்உன்ஸ்வப்னத்தில் தோன்றியவரும்அவரே. அவரால்அளிக்கப்பட்ட அஸ்திரங்களால்தான் நீ பல அசுரர்களை முன்புகொன்றாய். தைரியத்துடன் சென்று இப்பொழுது யுத்தம்செய். உனக்குத் தோல்வி என்பதே கிடையாது. மேலும் உனக்கு மந்திரியாகவும் இரக்ஷகனுகவும் ஸ்ரீகிருஷ்ணன் உன்பக்கத்திலேயே இருந்து கொண்டிருக்கிறான்" இதிலிருந்து கௌரவசேனைகளைக் கொன்றவர் ஸ்ரீபரமேச்வரன்தான் என்றும், அர்ஜுனன் அதற்கு ஓர் நிமித்தமாகமட்டும் இருந்தான் என்றும் தெரியவருகிறது.

ஆனல் பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணன்

'मयैवैते निहताः पूर्वमेव निमित्तमात्रं भव सव्यसाचिन् ,'

"அர்ஜுனு! முன்பே என்னல் உன் எதிரிகள் எல்லாம் கொல்லப்பட்டுவிட்டனர். (அதாவது அவர்களுடைய பலம், வீர்யம், சக்தி எல்லாவற்றையும் அபகரித்து விட்டேன். உன் பாணம் அவர்கள்மேல் பட்டதும் அவர்கள் மடிந்து விடுவர். அவ்விதம் செய்தது உனக்கு புகழைத்தேடித் தருவதற்காக) ஆதலால் நீ அவர்களுடைய அழிவிற்கு நிமித்தமாக மட்டும் இரு' எனக்கூறுகிறார். இதிலிருந்து கௌரவசேனைகளை ஸ்ரீகிருஷ்ணன் கொன்றார் என்று ஏற்படுகிறது. சிவன் வேறு விஷ்ணு வேறு என்று பேதத்தை அங்கீகரித்தால் சதருத்ரீயத்தில் உள்ள வசனத்திற்கும் கீதாவாக்கியத்திற்கும் விரோதம் ஏற்படும். சிவவிஷ்ணு அபேதத்தை அங்கீகரித்தால் மேற்படி இருவாக்கியங்களுக்கும் விரோதமில்லாமல் பொருத்தமாக அர்த்தம் கூறலாம். ஆதலால் ஹரிஹராபேதமே சாஸ்திரஸம்மதம் என்று ஏற்படுகிறது.

மேலும் த்ரோண பர்வத்தில் அர்ஜுனஸ்வப்னத்தில் ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ச்சனை செய்த புஷ்பம் அவருக்கு அளித்த

சந்தனம், மாலை முதலியவை ஸ்ரீபரமேச்வரனுடைய உடலிலும் அவருக்கு சமீபத்திலும் காணப்பட்டன என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதனாலும் ஹரிஹராபேதம் சித்திக்கின்றது.

यो वै विष्णुः स वै रुद्रो यो रुद्रस्स पितामहः । एकमूर्तिस्त्रयो देवाः रुद्रविष्णुपितामहाः ॥

ஹரிவம்சத்திலே விஷ்ணுதான் சிவன், சிவன்தான் பிரும்ஹா பிரும்ஹா சிவன், விஷ்ணு எல்லாம் ஒரே மூர்த்திதான் என்று ஸ்பஷ்டமாகவும் கூறப்பட்டிருக்கிறது. அங்குள்ள ஹரிஹர ஸ்தோத்ரமும் இதையே உறுதிப்படுத்துகிறது.

ஹரிஹரஸ்தோத்ரம்.

देवौ हरिहरौ स्तोष्ये ब्रह्मणा सह सङ्गतौ ।
एतौ च परमौ देवौ जगतः प्रभवाप्ययौ ॥ 1

தே3வௌ ஹரிஹரௌ ஸ்தோஷ்யே ப்3ரஹ்மணா ஸஹ ஸங்க3தௌ ।
ஏதௌ ச பரமௌ தே3வௌ ஜகத: ப்ரப4வாப்யயௌ ॥

பிரம்ஹாவுடன் ஹரிஹரர்களை துதிக்கின்றேன். இவ்விருவர்களுமே உலகஉற்பத்திக்கும் அழிவிற்கும் காரணம்.

रुद्रस्य प्रभवो विष्णुः विष्णोश्च प्रभवः शिवः ।
एक एव द्विधा भूत्वा लोके चरति नित्यशः ॥ 2

ருத்3ரஸ்ய ப்ரப4வோ விஷ்ணு: விஷ்ணோஶ்ச ப்ரபவ: ஶிவ: ।
ஏக ஏவ த்3விதா4 பூ4த்வா லோகே சரதி நித்யஶ: ॥

ருத்ரனுக்கு உற்பத்திஸ்தானம் விஷ்ணு விஷ்ணுவுக்கு உற்பத்திஸ்தானம் சிவன். ஒரேதத்துவம் இரண்டாக ஆகி உலகில் நித்யமாக சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது.

न विना शङ्करं विष्णुः न विना केशवं शिवः ।
तस्मादेकत्वमापन्नौ रुद्रोपेन्द्रौ स्तुतौ पुरा ॥ 3

ந விநா ஶங்கரம் விஷ்ணு: நவிநா கேஶவம் ஶிவ: ।
தஸ்மாதே3கத்வமாபந்நௌ ருத்3ரோபேந்த்3ரௌ ஸ்துதௌ புரா ॥

சிவனில்லையேல் விஷ்ணு இல்லை. விஷ்ணு இல்லையேல் சிவன் இல்லை. அதனால்தான் ஒன்றாகியிருக்கும் சிவனும் விஷ்ணுவும் முன்பு துதிக்கப்பட்டிருக்கின்றனர்.

नमो रुद्राय कृष्णाय नमस्संहतचारिणे ।
नमष्षडर्धनेत्राय सद्विनेत्राय वै नमः ॥ 4

நமோ ருத்3ராய க்ருஷ்ணாய நம: ஸம்ஹதசாரிணே ।
நம: ஷட3ர்த்3த4நேத்ராய ஸ்த்3விநேத்ராயவை நம: ॥

ஒன்றுகசேர்ந்து சஞ்சரிக்கும் ருத்ரனுக்கும் கிருஷ்ணனுக்கும் நமஸ்காரம். முக்கண்ணனையும் இருநேத்திரங்களை பெற்றவராயுமுள்ள ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

नमः पिङ्गलनेत्राय पद्मनेत्राय वै नमः ।
नमः कुमारगुरवे प्रद्युम्नगुरवे नमः ॥ 5

நம: பிங்க3லநேத்ராய பத்3மநேத்ராய வை நம: ।
நம: குமாரகு3ரவே ப்ரத்யும்நகு3ரவே நம: ॥

பொன்னிறமான கண்ணையுடையவருக்கும் தாமரைக் கண்ணனுக்கும் முருகனுக்குத்தந்தையாயும் பிரத்யும்னனைப்பெற்றெடுத்தவராயும்உள்ள ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

नमोधरणिधाराय गङ्गाधाराय वै नमः ।
नमो मयूरपिञ्छाय नमः केयूरधारिणे ॥ 6

நமோ த4ரணித4ாராய க3ங்க3ாத4ாராய வை நம: ।
நமோமயூர பிஞ்ச2ாய நம: கேயூரத4ாரிணே ॥

பூமியைத்தரித்தவரான (வராஹ அவதாரகாலத்தில்) கங்காதரருக்கு நமஸ்காரம். மயில்தோகையைத்தரிப்பவரும், கேயூரம் என்ற ஆபரணத்தை அணிந்தவருமான ஹரிஹரருக்குநமஸ்காரம்.

नमः कपालमालाय वनमालाय वै नमः ।
नमस्त्रिशूलहस्ताय चक्रहस्ताय वै नमः ॥ 7

நம: கபாலமாலாய வநமாலாய வை நம: ।
நமஸ்த்ரிசூல ஹஸ்தாய சக்ரஹஸ்தாய வை நம: ॥

மண்டைஓடுகளை மாலையாக அணிந்தவரும், வனமாலையை அணிந்தவரும் திருசூலத்தைக்கையிலேந்தியவரும் சக்ராயுதத்தை தரிப்பவருமான ஹரிஹரரைவணங்குகின்றோம்.

नमः कनकदण्डाय नमस्ते व्रतदण्डिने ।
नमश्चर्मवसानाय नमस्ते पीतवाससे ॥ 8

நம: கநகத3ண்ட3ாய நமஸ்தே வ்ரதத3ண்டி2நே ।
நம: சர்மவஸாநாய நமஸ்தே பீதவாஸஸே ॥

சுவர்ணதண்டத்தைப் பெற்றவருக்கும், ப்ரஹ்மசர்யவிரு

தானுஷ்டத்தின்பொருட்டு (வாமனவதார காலத்தில்) பலாசதண்டத்தைப்பெற்றவரும், யானைத்தோலை அணிந்தவரும் பீதாம்பரதாரியுமான தங்களுக்கு நமஸ்காரம்.

नमोस्तु लक्ष्मीपतये पार्वतीपतये नमः ।
नमः खट्वाङ्गधाराय नमो मुसलधारिणे ॥ 9

நமோஸ்து லக்ஷ்மீபதயே பார்வதீபதயே நம: ।
நம: க2ட்வாங்க3த4ாராய நமோமுஸலத4ாரிணே ॥

லக்ஷ்மீபதியாயும் பார்வதீபதியாயும் கட்டில்காலை ஆயுதமாக தரித்தவராயும், உலக்கையை ஆயுதமாகக்கொண்டவராயுமுள்ள ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

ஸதாசிவமூர்த்திக்கு கட்டில்கால் ஆயுதமென்றும் பலராமனுக்கு உலக்கை ஆயுதமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

नमो भस्माङ्गरागाय नमः कृष्णाङ्गधारिणे ।
नमः श्मशानवासाय नमस्त्वाश्रमवासिने ॥ 10:

நமோ ப4ஸ்மாங்க3ராக3ாய நம: க்ருஷ்ணாங்க3த4ாரிணே ।
நம: ச்மசாநவாஸாய நமஸ்த்வாச்ரமவாஸிநே ॥

விபூதியை உடல்முழுவதும் பூசிக்கொள்கின்றவரும் கருத்த உடலைப் பெற்றவரும் ச்மசானவாஸியாயும் ஆச்ரமவாஸியாயுமுள்ள ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

नमो वृषभवाहाय नमोगरुडवाहिने ।
नमोस्त्वनेकरूपाय बहुरूपाय वै नमः ॥ 11

நமோ வ்ருஷப4வாஹாய நமோ க3ருட4வாஹிநே ।
நமோஸ்த்வநேகரூபாய ப3ஹுரூபாய வை நம: ॥

விருஷபவாஹனராயும் கருடவாஹனராயும் பல உருவங்களைப்பெற்றவரும் அநேகரூபங்களைஉடையவருமான ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

नमः प्रलयकर्त्रे च नमस्सागरशायिने ।
नमोस्तु सौम्यरूपाय नमोभैरवरूपिणे ॥ 12

நம: ப்ரலயகர்த்ரேச நம: ஸாக3ரசாயிநே ।
நமோஸ்து ஸௌம்யரூபாய நமோ பைரவரூபிணே ॥

பிரளயகர்த்தாவாயும் சமுத்திரத்தில் சயனம்செய்துகொண்டிருப்பவராயும் அழகிய உருவத்தைப்பெற்றவராயும் பயங்கர—ஸ்வரூபத்தை உடையவருமான ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

विरूपाक्षाय देवाय नमस्सौम्येक्षणाय च ।
दक्षयज्ञविनाशाय बलेर्नियमनाय च ॥ 13

விரூபாக்ஷாய தே3வாய நம: ஸௌம்யேக்ஷணாய ச ।
த3க்ஷயஜ்ஞவிநாசாய ப3லேர்நியமநாய ச ॥

லோகவிலக்ஷணமாக மூன்றுகண்களையுடையவரும் அழகிய நேத்திரங்களைப்பெற்றவரும்தக்ஷனுடைய யஜ்ஞத்தை அழித்தவரும் பலிசக்ரவர்த்தியை நிக்ரஹம் செய்தவருமான ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

नमः पर्वतवासाय नमः सागरशायिने ।
नमः सुररिपुघ्नाय त्रिपुरघ्नाय वै नमः ॥ 14

நம: பர்வதவாஸாய நம: ஸாக3ரசாயிநே ।
நம: ஸுராரிபுக்4நாய த்ரிபுரக்4நாய வை நம: ॥

மலையில்வசிப்பவரும் சமுத்திரத்தில்படுப்பவரும் அசுரர்களை அழித்தவரும், திரிபுரஸம்ஹாரம் செய்தவருமான ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

नमोस्तु नरकघ्नाय नमः कामाङ्गनाशिने ।
नमस्त्वन्धकनाशाय नमः कैटभनाशिने ॥ 15

நமோஸ்து நரகக்4நாய நம: காமாங்க3நாசிநே ।
நமஸ்த்வந்த4கநாசாய நம: கைடபநாசிநே ॥

நரகாசுரனைக்கொன்றவரும் காமனுடைய உடலை எரித்தவரும் அந்தகாசுரனை அழித்தவரும் கைடபாசுரனைக்கொன்றவருமான ஹரிஹரருக்கு நமஸ்காரம்.

नमस्सहस्रहस्ताय नमोसंख्येयबाहवे ।
नमस्सहस्रशीर्षाय बहुशीर्षाय वै नमः ॥ 16

நம: ஸஹஸ்ர ஹஸ்தாய நமோஸங்க்2யேயபா3ஹவே ।
நம: ஸஹஸ்ரசீர்ஷாய ப3ஹுசீர்ஷாய வைநம: ॥

ஆயிரம்கைகளைப்பெற்றவரும் கணக்கில்லாகைகளைஉடையவரும் ஆயிரம்தலைகளைஉடையவரும் பலதலைகளைஉடையவருமான ஹரிஹரருக்குநமஸ்காரம்.

दामोदराय देवाय मुञ्जमेखलिने नमः ।
नमस्ते भगवन् विष्णो नमस्ते भगवन् शिव ॥ 17

தா3மோத3ராய தே3வாய முஞ்சமேக2லிநே நம: ।
நமஸ்தே ப4க3வந் விஷ்ணோ நமஸ்தே ப4கவந் சிவ ॥

தாமோதரராயும் முஞ்சிப்பில்லால் திரிக்கப்பட்ட கயிற்றை இடையில் அணிந்தவருமான தேவருக்கு நமஸ்காரம். ஏ பகவந் விஷ்ணோ! தங்களுக்கு நமஸ்காரம். ஏ பகவந்சிவ! தங்களுக்கு நமஸ்காரம்.

नमस्ते भगवन्देव नमस्ते देवपूजित ।
नमस्ते सामभिर्गीत नमस्ते यजुभिस्स्तुत ॥ 18

நமஸ்தே ப4க3வந் தே3வ நமஸ்தே தே3வபூஜித ।
நமஸ்தே ஸாமபி4ர்கீ3த நமஸ்தே யஜுர்பி4ஸ்துத ॥

ஏ பகவந்தேவ! தங்களுக்குநமஸ்காரம். தேவர்களால்பூஜிக்கபட்டவரே! தங்களுக்கு நமஸ்காரம். ஸாமாக்களால் பாடப்பட்டவரே! தங்களுக்கு நமஸ்காரம். யஜுஸ்ஸுகளால் கொண்டாடப்பட்டவரே! தங்களுக்கு நமஸ்காரம்.

नमस्ते सुरशत्रुघ्न नमस्ते सुरपूजित ।
नमस्ते कर्मिणां कर्म नमोस्त्वमितविक्रम ॥ 19

நமஸ்தே ஸுரசத்ருக்4ந நமஸ்தே ஸுரபூஜித ।
நமஸ்தே கர்மிணாம் கர்ம நமோஸ்த்வமிதவிக்ரம ॥

தேவர்களின் விரோதிகளை அழித்தவரே! தங்களுக்கு வணக்கம். தேவர்களால் பூஜிக்கப்பட்டவரே? தங்களுக்கு நமஸ்காரம். கர்மானுஷ்டசீலர்களுக்கு கர்மரூபமாக இருக்கும் தங்களுக்கு நமஸ்காரம். அளவுகடந்த பராக்ரமத்தை உடையவரே? தங்களுக்கு நமஸ்காரம்.

हृषीकेश नमस्तेस्तु स्वर्णकेश नमोस्तु ते ।
ஹ்ருஷீகேச நம்ஸ்தேஸ்து ஸ்வர்ணகேச நமோஸ்துதே ।

ஏ ஹ்ருஷீகேச தங்களுக்கு நமஸ்காரம் பொன்னிறமான கேசங்களைப்பெற்றவரே தங்களுக்கு நமஸ்காரம்.

इमं स्तवं तु रुद्रस्य विष्णोश्चैव महात्मनः ॥ 20
समेत्य ऋषिभिस्सर्वैः स्तुतौ तौ सुमहात्मभिः ।
व्यासेन वेदविदुषा नारदेन च धीमता ॥ 21
भारद्वाजेन गार्ग्येण विश्वामित्रेण वै तदा ।
अगस्त्येन पुलस्त्येन धौम्येन च महात्मना ॥ 22

இமம் ஸ்தவம் து ருத்3ரஸ்ய விஷ்ணோ: சைவ மஹாத்மந: ।
ஸமேத்ய ருஷிபி4: ஸர்வை: ஸ்துதௌ தௌ ஸுமஹாத்மபி: ॥
வ்யாஸேந வேதவிது3ஷா நாரதே3ந ச தீ4மதா ।

பாரத்3வாஜேந க3ார்க்யேண விச்வாமித்ரேண வை ததா
அக3ஸ்த்யேந புலஸ்த்யேந தௌம்யேந ச மஹாத்மநா ||

அக்காலத்தில் ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்த வேதங்களை அறிந்த வ்யாஸர், மேதாவியான நாரதர், பாரத்வாஜர் கார்க்கியர், விச்வாமித்ரர், அகஸ்தியர் புலஸ்தியர், தௌம்யர், முதலிய மிக்க மஹிமை பொருந்திய எல்லா மஹரிஷிகளாலும் இந்த ஸ்தோத்திரத்தைக் கூறி ருத்ரரும் விஷ்ணுவும் துதிக்கப்பட்டார்கள்.

यश्चेदं पठते नित्यं स्तोत्रं हरिहरात्मकम् ।
आरोगी बलवांश्चैव जायते नात्र संशयः ॥ 23

ய: சேத3ம் பட2தே நித்யம் ஸ்தோத்ரம் ஹரிஹராத்மகம் |
ஆரோகீ3 பலவாம்ச்சைவ ஜாயதே நாத்ர ஸம்சய: ||

श्रियश्च लभते नित्यं न च स्वर्गान्निवर्तते ।
अपुत्रो लभते पुत्रं कन्या विन्दति सत्पतिम् ॥ 24

ச்1ரிய: ச லப4தே நித்யம் ந ச ஸ்வர்க3ாந்நிவர்த்ததே |
அபுத்ரோ லப4தே புத்ரம் கந்யா விந்ததி ஸத்பதிம் ||

இந்த ஹரிஹரஸ்தோத்திரத்தை எவன் பிரதிதினம் படிக்கின்றானோ அவன் ரோகமற்றவனும் பலமுள்ளவனும் ஆவான்.— இதில் ஸம்சயமில்லை. ஐச்வர்யங்களையும் அடைவான். (ஆயுள்காலம் முடிந்ததும்) ஸ்வர்க்கத்துக்குச்சென்று அவ்விடத்திலேயே நிலைபெற்றிருப்பான். பிள்ளையில்லாதவன் பிள்ளையைப்பெறுவான் கன்னிகையாயிருந்தால் சிறந்தகணவனை அடைவாள்.

गुर्विणी शृणुते या तु वरं पुत्रं प्रसूयते ।

கு3ர்விணீ ச்ருணுதே யா து வரம் புத்திரம் ப்ரஸூயதே

கர்ப்பிணீ இந்த ஸ்தோத்திரத்தை சிரவணம் செய்தால் ஸத்புத்திரனைப்பெற்றெடுப்பாள்.

राक्षसाश्च पिशाचाश्च भूतानि च विनाशकाः ।
भयं तत्र न कुर्वन्ति यत्रायं पठ्यते स्तवः ॥

ராக்ஷஸா: ச பிசா1சா: ச பூதானிச விநாசகா:
ப4யம் தத்ர நகுர்வந்தி யத்ராயம் பட்2யதே ஸ்தவ: ||

எங்கு இந்த ஸ்தோத்திரம் படிக்கப்படுகின்றதோ அவ்விடத்தில் இராக்ஷஸர்களோ, பிசாசங்களோ அழிக்கும், சக்தியுள்ள மற்றபூதங்களோ, எவ்விதபயத்தையும் உண்டுபண்ணமாட்டா.

விஷ்ணு புராணத்தில், सृष्टिस्थित्यन्तकरिणीं ब्रह्मविष्णुशिवात्मिकां संज्ञां याति भगवानेक एव जनार्दनः ॥'.

"பகவான் ஜனார்த்தனர் ஒருவரே ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவற்றைச்செய்யும் பிருஹ்மா, விஷ்ணு சிவன் என்ற பெயர்களைப் பெற்றிருக்கிறார்." எனக்கூறப்பட்டிருக்கிறது.

மஹாகவி காளிதாஸனும்

एकैव मूर्तिर्बिभिदे त्रिधा सा सामान्यमेषां प्रथमावरत्वम् ॥"

"ஒரே மூர்த்தியே மூன்றாகப் பிரிந்திருக்கிறது. உயர்ந்தது தாழ்ந்தது என்பது மூன்றுக்கும் பொதுவானது" என வர்ணித்திருக்கிறார், ஆதலால் அக்கவி ஆங்காங்கு பிருஹ்மா, விஷ்ணு, சிவன் எல்லோரையும் புகழ்ந்திருக்கிறார்.

"தேவாரத்தில் அப்பர்ஸ்வாமிகள் திருவாரூர் க்ஷேத்திரத்தின் பழமையைச் சொல்லுகையில் "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ, ஓருருவே மூவுருவாய் ஆன நாளோ, திருவாரூர் கோயிலாக்கொண்ட நாளே" என்று சொல்லியிருக்கிறார்.

திருவாய்மொழியில் நம்மாழ்வார் "முனியே நான்முகனே முக்கண்ணப்பா" என்று விஷ்ணுவைப் பாடியிருக்கிறார். விஷ்ணுவை துதிசெய்யவந்தவர் அவரையே "முக்கண்ணப்பா" என்று சொல்லியிருப்பதின் கருத்து தெளிவாக இருக்கிறது.

பேயாழ்வார் திருமாலைக்குத் தரிசனத்துக்குப் போய்

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்— சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவ மொன்றா இசைந்து."

என்று சொல்லியிருப்பது பிரசித்தம்

பொய்கை ஆழ்வார்

"அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறையுறையும் கோவில்—வரைநீர்
கருமம் அழிப்பு அளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார் மேனி யொன்று"

என்று பாடியிருக்கிறார். "உனக்கு அரன் என்றும் அரி என்றும் இரண்டு பெயர்கள் உண்டு. விருஷபம் என்றும் புள் என்றும் இரண்டு வாஹனங்களுண்டு. மலை என்றும் கடலென்றும் இரண்டு இருப்பிடங்களுண்டு" என்பது இதன்பொருள்.

கம்பனாட்டார் "அரன் அதிகம் அரி அதிகம். என்றுரைப் போருக்குப் பரகதியில்லை என்று சொல்லிவிட்டார்" என்றுநமது

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகள் அவர்களும் அருளிச் செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர் அவர்களும் சிதம்பர க்ஷேத்திரத்தில் ஸ்ரீநடராஜர் ஸ்ரீகோவிந்தராஜர் இருவர்களையும் சேர்த்து நூறு சுலோகங்களால் துதிசெய்திருக்கிறார். அந்தஸ்தோத்திரத்திற்கு "ஹரிஹரசதகம்" என்று பெயர். அடியிற்கண்ட இரு சுலோகங்களும் அதைச் சேர்ந்தவை:—

मारमणमुमारमणं फणधरतल्पं फणधराकल्पम् ।
मुरमथनं पुरमथनं वन्दे वाणारिमसमवाणारिम् ॥

லக்ஷ்மீகாந்தனையும், உமாகாந்தனையும், ஸர்ப்பத்தை படுக்கையாக பெற்றவரும், ஸர்ப்பத்தை ஆபரணமாகக் கொண்டவரும், முரனைக்கொன்றவரும், திருபுரசம்ஹாரம் செய்தவரும் பாணாசுரனுக்கு விரோதியும், மன்மதனுக்கு விரோதியுமான ஹரியையும் ஹரனையும் வணங்குகிறேன்.

वस्तां पिशङ्गं वसनं दिशोवा गुरुत्मता यातु ककुद्मता वा ॥
निद्रातु वा नृत्यतु वाधिरङ्गं भेदं न पश्यामि परस्यवस्तुनः

பீதாம்பரதாரியானாலும் சரி, அல்லது திகம்பரரானாலும் சரி, கருடன்மேல் ஏறிச்செல்கின்றவரானாலும் சரி, விருஷபத்தின் மேல் ஏறிச்செல்கின்றவரானாலும் சரி, ஸ்ரீரங்கத்தில் நித்திரை செய்கின்றவரானாலும் சரி, அல்லது சித்ஸபையில் நர்த்தனம் செய்கின்றவரானாலும் சரி, பரம் பொருள் ஒன்றே. அதில் நான் எவ்வித பேதத்தையும் அறியேன்.

இதில் ஸ்பஷ்டமாக தீக்ஷிதரவர்கள் ஹரிஹராபேதத்தை விளக்கியுள்ளார்கள்.

பகவந்நாமோச்சாரணத்தால் விசேஷமாகபல பயன்களை அடையக்கூடுமானாலும், முக்கியமாக பத்துவித குற்றங்களால் அப்பயன் கிட்டாமல் போகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. அக்குற்றங்களுள் श्रीशेशयोर्भेदधीः என்று ஹரிஹர பேத புத்தியும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆதலால் ஹரிஹராபேதமே சாஸ்திரஸம்மதம் என்று சித்திக்கிறது.

கேனோபனிஷத்

சிஷ்யன்:- குரோ? சென்ற மாதம் சாதனசதுஷ்டயத்தில் முதலாவதான நித்யாநித்யவஸ்து விவேகத்தைப்பற்றி எடுத்துக் கூறினீர்கள். மற்ற மூன்றையும் தங்கள் மூலமாகவே அறிய வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஆனால்தற்காலம் ஸ்ரீகாஞ்சீகாமகோடி பீடாதிபதி அவர்களுடைய ஆஜ்ஞைப்படி ஆங்காங்கு தசோபனிஷத் பாராயணமும், பிரவசனமும் நடைபெற்று வருகிறது. அந்தப்பிரவசனத்திற்கு நானும் தவறாமல் சென்றுகொண்டிருக்கிறேன். நேற்றுதான் கேனோபனிஷத் பிரவசனம் நடைபெற்றது. அதைக்கேட்டது முதல் தங்கள்முகமாக அந்த உபனிஷத்தின் தாத்பர்யத்தை கேட்டு தெரிந்துகொள்ள வேண்டுமென்று அவா ஏற்பட்டுவிட்டது. ஆதலால்மற்றசாதனங்களைப்பற்றி சொல்லுவதற்கு முன் கேனோபனிஷத் ஸாரத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்க வேணுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

குரு:- வத்ஸா! ஒரு சாதனத்தைப்பற்றி கேட்டவுடனேயே உனக்கு உபனிஷத்ஸாரத்தை அறிய வேண்டுமென்ற விருப்பமும் அதற்கேற்ற சந்தர்ப்பமும் ஏற்பட்டுவிட்டது. இது ஒரு சுப சூசகம் என்றே தோன்றுகிறது. நானும் மேற்படி பிரவசனத்தை செய்வதற்காக உபனிஷதபாஷ்யங்கள், அதன் வியாக்யானங்கள் மற்றும் சில உபனிஷத் விளக்கங்கள் இவை எல்லாவற்றையும் தற்காலம் நன்கு பரிசீலனை செய்து வருகிறேன். இப்பொழுது மற்ற விஷயங்களைப்பற்றி கூறுவதைவிட இதைப்பற்றி கூறுவது தான் மிக சுலபம். ஆதலால் கேனோபனிஷத்தைப் பற்றியே இப்பொழுது சொல்லுகிறேன். கவனமாகக் கேள்.

ஸாமவேதத்தில் "தலவகாரசாகை" என்று ஓர் பிரிவுஉண்டு. அதைச்சேர்ந்ததுதான் இந்த உபனிஷத். "உபனிஷத்" என்ற சொல்லின் பொருளை நீ விரிவாக ஹிதபாஷிணியில் வெளிவந்த ஈசாவாஸ்யோபனிஷத் விளக்கத்திலிருந்து அறிந்துகொண்டிருப்பாய். ஆதலால்அதைப்பற்றி மறுபடியும் சொல்லவேண்டியதில்லை இந்த உபனிஷத்தில் ஓர் சிறந்த சிஷ்யன் ஆசார்யனுடைய பாதம் பணிந்து வினயத்துடன் சில கேள்விகளை "கேநேஷிதம்பததி" என்று ஆரம்பித்துக் கேட்கிறான். "கேந" என்று ஆரம்பத்தில் இருப்பதால் இதற்கு "கேனோபனிஷத்" என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

சிஷ்:- குருசிஷ்ய ஸம்வாதரூபமாக சில உபனிஷத்துக்கள் அமைந்திருப்பதற்கு ஏதாவது காரணங்கள் உண்டோ?

குரு:- நன்றாக உண்டு. மிகக்கடினமான விஷயங்களைக்கூட கேள்விகளாகவும் பதில்களாகவும் அமைத்துக்கூறினால் பிறர் சுலபமாக அறிந்துகொள்ளக்கூடும். எப்படியாவது உயர்ந்த ஆத்ம தத்துவத்தை அறிந்து நாம் அனைவரும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்ற கருணையுடன் உபனிஷத் மாதா பல கேள்விகளைத்தானே கேட்டுக் கொண்டு பதில்களையும் கூறுகிறாள். மேலும் இதனால், இம்மாதிரி விஷயங்கள் குருபதேசத்தால்மட்டும் அறிந்துகொள்ளக்கூடியவை சொந்த புத்தியால் ஊஹித்து தெரிந்து கொள்ளக் கூடியவை அல்ல என்றும் தெரியவருகிறது.

சிஷ்:- தாங்கள் சொல்லுவது ரொம்பசரி. அதுவும் இந்த உபனிஷத்தைப் பொருத்தமட்டில் குரு எடுத்துரைக்காதவரை ஒன்றுமே புரியாது என்று நேற்று பிரசங்கத்தைக் கேட்கும் போதே தீர்மானம் செய்து விட்டேன். “நான் பிருஹ்மத்தை அறிகிறேன்” என்று கூறுகின்றவன் அந்த பிருஹ்மத்தின் ஸ்வரூபத்தை அறியவில்லை யென்றும், எவன் அவ்விதம் உரைக்கவில்லையோ அவனே அதை அறிந்தவன் என்றும் இந்த உபனிஷத்தில் கூறப்படுவது மிக ஆச்சரியமாகவே இருக்கிறது. இதன் பொருளை தங்களைப்போன்ற குரு விளக்கிக்கூறினால்தான் புரியும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆதலால் ஆரம்பத்தில் சிஷ்யன் கேட்கும் கேள்விகளையும் அவற்றின் கருத்தையும் தாங்களே விளக்கவேணும்.

குரு:- மனது, பிராணன், ச்ரோத்ரம், நேத்ரம், வாக் முதலியவை யாரால் தூண்டப்பட்டு அதனதன் கார்யத்தைச் செய்கின்றன? என்பது சிஷ்யனின் கேள்வி.

केनेषितं पतति प्रेषितं मनः केन प्राणः प्रथमः प्रैति युक्तः ।
केनेषितां वाचमिमां वदन्ति चक्षुः श्रोत्रं क उ देवो युनक्ति ॥

சிஷ்:- மனது முதலியவற்றின் கார்யங்கள் யாவை?

குரு:- விஷயத்தைப்பற்றி எண்ணுதல், ஆலோசித்தல் உச்வாஸநிச்வாஸம், சப்தத்தைக்கேட்பது, ரூபத்தைப்பார்ப்பது, சப்தத்தை உச்சரிப்பது முதலியவை முறையே மனது முதலியவற்றின் கார்யங்கள்.

சிஷ்:- இவையெல்லாம் தாமாகவே அவற்றின் கார்யங்களைச் செய்யட்டுமே! பிறரால் ஏன் தூண்டப்படவேண்டும்?

குரு:- வண்டி, தேர் முதலிய ஜடவஸ்துக்களுக்கு தானாகவே செல்லும் திறமையில்லாததால், அவைகளைப்போல் மனம் முதலியவையும் ஜடமானதால் தாமாகவே காரியங்களைச்செய்யமாட்டா

ஆதலால் அவசியம் சேதனனான ஒரு பிரேரகன் இருக்கத்தான் வேண்டும்.

சிஷ்:- அப்படியானால் ஜீவனே பிரேரகனாக இருக்கட்டுமே?

குரு:- அது எப்படி? ஜீவனுக்கு ஏது ஸ்வாதந்திரியம்? அவனிஷ்டப்படி இந்திரியங்களை பிரேரணை செய்வானேயாகில் அவனுக்கு சுகத்தை அளிக்கும் காரியங்களிலேயே இந்திரியங்களை ஏவலாம். ஆனால் அப்படிச் செய்யக்காணோம். “இந்த விஷயத்தில் என் இந்திரியங்கள் செல்லக்கூடாது” என்று அவன் கருதியபோதிலும் அவனறியாமலே இந்திரியங்கள் எல்லாம் தூண்டப்பட்டு பலகாரியங்களைச் செய்துவிடுவதால் அவன் பல துன்பங்களுக்கு உள்ளாகவேண்டியிருக்கிறது. ஆகலால் ஜீவன் பிரேரகன் அல்ல. இந்திரியாபிமானிகளான தேவர்களுக்கும் ஸ்வாதந்திரியமில்லை. புண்யபாப ரூபமான கர்மாக்களும் ஜடமானதால் சுதந்திரமாக இந்திரியங்களை பிரேரணை செய்யமாட்டா ஈச்வரன் பிரேரணைசெய்கின்றார் என்றால் அவர் ஒருவரா! அல்லது பலரா! ஒருவராக இருக்கமுடியாது! பல இந்திரியங்களை பல மாதிரியான காரியங்களில் தூண்டவேண்டியிருப்பதால் பலராகத்தான் இருக்கவேண்டும். அப்படியே இருக்கட்டுமே என்றும் கூறமுடியாது. ஒரு தேசத்திற்கு பல அரசர்கள் இருந்தால் அவர்களுள் ஒற்றுமையில்லாமல் தேசம்கெட்டுவிடும். அதுபோல் பல ஈச்வரர்கள் இருந்தாலும் தீங்குகள்தான் விளையும். ஆதலால் எவ்வித குறைகளைக் கூறவும் இடமில்லாமல் தாங்கள் ஒரு பிரேரகனை எடுத்துரைக்க வேண்டுமென சிஷ்யன் வினவினான்.

சிஷ்:- இவ்வளவு அபிப்ராயங்களுடன் சிஷ்யன் கேட்கின்றான் என்றால் அவன் மிகச்சிறந்த அறிவாளியாக வல்லவோ இருக்கவேண்டும்.

குரு:- அதற்கென்ன சந்தேஹம்? பல ஜன்மங்களில் பல நிஷ்காம்ய கர்மாக்களை அனுஷ்டித்ததால் சித்தத்தில் உள்ள தோஷங்கள் எல்லாம் விலகி, அதனால் ஸமஸ்த ஐஹிகாமுஷ்மிக போகங்களிலும் பூர்ணவைராக்ய மேற்பட்டு, அபயமாயும் நித்யமாயுமுள்ள ஆத்மஸ்வரூபத்தை அவசியமறிந்தே ஆகவேண்டுமென்ற ஆவல் கொண்ட ஒருவனே இங்கு சிஷ்யனாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கேற்ற பதிலையே குருவும் சொல்லுகின்றார் கேள். श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यत्

वाचो ह वाचं स उ प्राणस्य प्राणश्चक्षुषश्चक्षुः

“காதுக்குக்காது, மனதுக்கு மனது, வாக்கிற்கு வாக்,

பிராணனுக்கு பிராணன், கண்ணுக்குக்கண். இப்படிப்பட்ட வஸ்துவே, காது, மனது முதலிய ஸர்வேந்திரியங்களுக்கும் பிரேரகனாக இருக்கிறது. அதாவது காதுக்கு சப்தங்களைக் கேட்கும் திறமை இருக்கிறது. அத்திறமை எதன் மூலம் ஏற்பட்டதோ அதுவே காதுக்குக்காது" என்பதால் குறிப்பிடப்படுகிறது. இதைப்போலவேதான் "மனதிற்கு மனது, வாக்கிற்கு வாக்" முதலியவிடங்களிலும் பொருள்.

சிஷ்:- இதென்ன பதில்! காது முதலியவைகளுக்கு பிரேரகன் இம்மாதிரி ஸ்வரூபத்துடன் இந்த இடத்தில் இருக்கின்றான் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். அப்படியில்லாமல் "காதுக்குக் காது, மனதிற்கு மனது" என்று ஏன் பதில்சொல்ல வேண்டும்?

குரு:- வேறு எந்தவிதமாகச் சொன்னாலும் பொருத்தமாகாது. ஜடமான வண்டி முதலியவற்றை ஓட்டுகின்ற வண்டிக்காரன், கையில் சாட்டை முதலியவற்றுடன் காணப்படுகிறான். அதுபோல் காது முதலியவைகளின் பிரேரகன் தன்சொந்த உருவத்துடன் காணப்பட்டால் நேரிடையாக இம்மாதிரி உருவத்துடன் கூடியவன்தான் பிரேரகன்என்று பதிலைக்கூறலாம். அப்படி இல்லாததால் இம்மாதிரிதான் பதிலைக்கூறவேண்டி இருக்கிறது.

இதன் கருத்து:. ஆத்மசைதன்யம் ஒன்றே எல்லாவிடங்களிலும் அந்தர்யாமியாக இருந்துகொண்டு இந்திரியங்களை எல்லாம் அதனதன் காரியங்களில் பிரேரணை செய்துகொண்டிருக்கிறது. சிதானந்தஸ்வரூபமாகக் கூறப்பட்ட சுத்த பிருஹ்மமே மாயாசம்பந்தத்தால் ஈச்வரனாக ஆனான் என்றும் அவனுக்கு பலவித சக்திகள் உள்ள என்றும் வேறு உபனிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. காதிற்குள்ள சிரவணசக்தி, கண்களுக்குள்ள தர்சன சக்தி. முதலியவை எல்லாம் அவற்றிற்குச் சொந்தமல்ல. ஆத்மாவிற்கே சொந்தமானவை. அதனிடமிருந்தே காது, கண் முதலியவைகளுக்கு மேற்படி சக்திகள் ஏற்பட்டன. ஆதலால்தான் இங்கு ஆத்மாவைக்கூட ச்ரோத்ரம், சக்ஷுஸ், மநஸ், என்றெல்லாம் உபனிஷத் கூறுகிறது.

பிரேரகனான ஈச்வரன் ஒருவராக இருந்தாலும், அவருக்கு பலவித சக்திகள் இருப்பதால், கண், காது முதலிய பல இந்திரியங்களை வெவ்வேறு காரியங்களில் நியமனம் செய்கின்றார்.

சிறந்த மேதாவிகள் ச்ரோத்ரம் முதலியவற்றிற்கெல்லாம் ச்ரோத்ரம் முதலியவையாக இருக்கும் பரமாத்மஸ்வரூபத்தையே ஆத்மஸ்வரூபமாக அறிந்து முக்தியடைகின்றனர். (தொடரும்.)

199863
சென்னை-600 003.

சிறுகதை:

சக்வவேண மஹாராஜன்.

Dr. S வெங்கட்டராஜன், L. I. M. (Regd.)

ஸத்யம், தயை, விடாமுயற்சி, பிறர் பொருளிலிச்சை யின்மை, ஞானம், கடவுளிடத்தில் பக்தி முதலிய குணங்களோடு கூடியவர் ராஜா சக்வவேணன். அமராவாழ்க்கைக்குரிய அரசனாக இருந்த போதிலும், தன் ராஜ்ய வருமானத்திலிருந்து சிறு பங்கையேனும் தனக்காகவும், தன் மனைவி மக்களுக்காகவும் உபயோகிக்காமல், முற்றுந் துறந்த முனிவரின் வாழ்க்கையையே நடத்திவந்தார். ஜனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகை முழுவதும், அவர்களின் நன்மைக்காகவே விநியோகிக்கப்பட்டன. நானே பிரஜைகளுக்கு அரசன் என்ற மமதையில்லாமலும், சிரத்தைக்குறைவில்லாமலும், தன் உடல், ஆவி முதலியவைகளும் பொது ஜன நன்மைக்கே என்ற தத்துவத்தை முற்றிலும் உணர்ந்து, ராஜ்யபாரம் செய்துவந்தார். ஆகவே அவர் பொதுஜன நன்மதிப்பைப் பெற்றதில் வியப்பில்லை யல்லவா?

மேலும், மஹாராஜா, தனக்கென்று ஏற்பட்ட வயல்களை ராணியைக்கொண்டு உழச்செய்து, அதில் தன் கையினாலேயே விதை விதைத்துப், பாதுகாத்து, அறுவடை செய்து அத்தானியத்தைச் சாப்பிடுவரே யல்லாது, பிறர் பாடுப்பட்டுப் பயிர்செய்த தான்யங்களைப் பெரிதும் விரும்புவதில்லை. தினந்தோறும் தன் நிலத்தில் விளைந்த காய்கறிகளைகொண்டே சமையல் செய்வது இவர் வழக்கம். தான் உடுக்கும் ஆடைகளும், தன் நிலத்தில்விளைந்த பருத்தியிலிருந்து நெய்யப்பட்டதாகும். கரும்பு முதலானவைகளும் தன் நிலத்திலேயே விளைந்தவைகளாகும். தன் பிரியத்திற்குகந்த ராணிக்குக்கூட ஆபரணங்கள் கிடையாது. ஏனெனில் தன் நிலத்திலிருந்து வரும் வருமானம் பருத்தி ஆடைக்கும், சாப்பாட்டிற்குமே போதுமானதாக இருந்ததே யல்லாது மீதி இல்லை. மற்றும், பொக்கிஷத்திலிருந்த பொருள்களனைத்தும் ஜனங்களுடையது அல்லவா?

தினந்தோறும் தன் நிலத்தில் பாடுபடுவதன்னியில், ராஜ்ய பாரத்தையும் திறம்பட வகித்து, எளிய வாழ்க்கையும் மேற்கொண்டது எவ்வளவுஆச்சரியத்தையளிக்கிறது. உயிருள்ள வஸ்துக்களெல்லாம் ஈச்வரனின் அம்சங்கள் என்பதை நடைமுறையிலும் கொண்டுவந்து, அவற்றை ஒரே விதமான அன்புடனும், தயையுடனும், பரிபாலித்தார் தனக்குவேண்டிய சௌகரியங்களுக்கு பிறர் ஒத்தாசையை நாடுவதில்லை. வழக்குகளில் தனக்குவேண்டியவர், விரோதி என்ற மனப்பான்மையில்லாது, பொறுமையுடன் இருகட்சிகளையுந்தீரவிசாரித்து நியாயத்தையே வழங்கினார்.

ஜனங்களுடனே நெருங்கிப் பழகி அவர்களின் க்ஷேம சமாசாரங்களை அறிய ஆவலுள்ளவனாய் ஒரு மாபெரும் விழா ஏற்பாடுசெய்தார். அதைத்திறம்பட நிறைவேற்றுவதற்காக முக்யஸ்தர்களுக்கும், பொது ஜனங்களுக்கும் வேண்டுகோள் அனுப்பினார். அரசனையும், அரசியையும் தரிசிக்கப் பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் பலத்த ஆடம்பரத்

துடனும், ஆரவாரத்துடனும் வந்து குழுமினர்

அப்போது ஒரு பிரபுவின் வீட்டிலிருந்து வந்திருந்த ஒரு ஸ்திரீ, தன் பரிவாரங்களுடன் மகாராணியைச் சந்திக்க வந்தாள். அரசி மிகவும் சாதாரணமான ஆடையையுடுத்தியிருப்பதைக் கண்டும், சிறு ஆபரணங்கூட அணியாமலிருப்பதைப் பார்த்தும் வியந்து, "மகாராணி! இந்த ராஜ்யத்தின் பட்டமகிஷியாகிய தாங்கள், ஏழைகளைப் போல், சாதாரணமான பருத்தி ஆடைகளை உடுத்திக்கொண்டிருப்பதும், அரசுரிமைக்கேற்றபடி ஆபரணாதிகளைப்பூணாமலிருப்பதையுங்காணநாங்கள்விசனமடைகிறோம். என்னிடமிருக்கும் வேலைக்காரிகூட மிக நேர்த்தியாகப் பட்டாடை அணிந்திருப்பதையும், ஆபரணங்கள் பூண்டிருப்பதையும் பாருங்கள். இந்த ராஜ்யாதிபதியின் பத்னியான தாங்கள் எங்களைவிட பதின்மடங்கு விலையுள்ள ஆடை, ஆபரணாதிகளைப் பூணுவதுதான் அழகு. அப்படிருக்கையில், ஓ அரசியே! தங்களுக்கு வேண்டியதையரசரிடம் தெரிவிக்கும் பட்சத்தில் அவர் இல்லையென்று சொல்லாமல் அளிக்கக்கூடுமே. நாங்கள் மறுதடவைவரும்போது ஆடையாபரணாதிகளை அணிந்து எங்களை மகிழ்விக்கவேண்டும்" என்று சொல்லி அரசியின் மனதைக்கலைத்தாள். அன்றிரவு அரசி அரசனிடம் பகலில் நிகழ்ந்த சம்பாஷணையைத் தெரிவித்துத் தனக்கு விலையுயர்ந்த ஆடையாபரணாதிகளை வாங்கித்தருமாறு கேட்டாள். அரசனும் "நான் எவ்வாறு அவைகளை உனக்காக வாங்கமுடியும்? பிரஜைகளின் பொருளை உபயோகித்து வாங்கலாகாது. வேறேதேனும் வழியிருந்தால் சொல்" என்றார். ராணி ஸ்வபாகமாகவே அரசர் சொன்னதைக்கேட்டுத் திருப்தியடைந்த போதிலும், காலையில் பிரபுவின் மனைவி கூறிய சொற்கள் அவள் மனதைக் கலக்கியது. ஆகவே "அரசே! தங்களோ இந்த ராஜ்யத்தின் அதிபதி, நானோ தங்கள் மனைவி, என் அந்தஸ்திற்குரிய ஆடையாபரணாதிகளைக் கொடுத்து சந்தோஷப் படுத்துவது தங்கள் கடமையாகும். இதை எப்படியாயினும் செய்வீரென்று நம்புகிறேன்" என்றாள்.

ஸகலஜீவராசிகளிடமும் தயையுள்ள சக்வவேண ராஜா, தனக்குள்ளே "பாவம், அந்தப்பிரபுக்கள் வீட்டு ஸ்திரீகள் இவளுடைய "பரிசுத்தமான இருதயத்தைக் கெடுத்துவிட்டனர் போலும். இச்சிறு அபிலாஷையைப் பூர்த்திசெய்ய என் பொக்கிஷத்திலிருந்து ஒரு செல்லாக்காசைக்கூடத் தொடமாட்டேன். நான் இந்த ராஜ்யத்திற்கு அதிபதியாக விருப்பதால் கொடுங்கோல் மன்னர்களிடமிருந்தும், துர்குணம் படைத்தவர்களிடமிருந்தும் பொருளைக்கேட்பது குற்றமாகாது. அதுதான் சரியான வழியாகும்" என நினைத்து, பிறநாட்டு அலுவல்களைக் கவனிக்கும் மந்திரியைக் கூப்பிட்டு "பிரிய மந்திரியே நேராக ராக்ஷஸர்களுக்கு அதிபதியான ராவணனிடஞ் சென்று காணிக்கையாக $1\frac{1}{4}$ மணு தங்கம் பெறுவதற்காக நான் உன்னை அனுப்புவித்தேன் என்று சொல்லி வாங்கி வருவாயாக" என்றார்.

இக்கட்டளையைக் கேட்ட மந்திரி, தனக்குவேண்டிய ஒரு

சிலருடன் ஒரு ரதத்திலேறிச் சமுத்திரக்கரையை யடைந்து, அங்கிருந்து ஒரு மரக்கலத்தின் மூலமாகச் சமுத்திரத்தைக்கடந்து, லங்கையை யடைந்தான். நேராக ராவணனுடைய தர்பாருக்குச் சென்று மஹாராஜா சக்வவேணருடையவிண்ணப்பத்தை மரியாதையுடனும், பரபரப்பில்லாமலுந் தெரிவித்துக் காணிக்கையாக $1\frac{1}{4}$ மணு தங்கம் தரும்படி கேட்டான். இதைக்கேட்ட ராவணன் உறக்கச்சிரித்து, மந்திரிப் பிரதானிகளைப் பார்த்து "இந்த உலகத்தில் இன்னும் என்னிடமிருந்து காணிக்கையை எதிர்பார்க்கும் முட்டாள் அரசனும் இருக்கின்றானா? சபாஷ்! நான்தான் கடவுள், முனிவர்கள், ராக்ஷஸர்கள் முதலியவர்களிடமிருந்து காணிக்கை வசூல் செய்கிறேனே! அப்படியிருந்தும் இந்த ராஜ்யத்திற்கு அதிபதியும், மிக்கபலம் பொருந்தியவனும் பிறரிடம் அடிபணியாத என்னிடமும் கூச்சமில்லாமல் கேட்கிறான் பாருங்கள், என்றுகூறி அத்தூதனான மந்திரியைச் சிறையிலடைக்க உத்தரவிட்டான். உடனே ராவணனின் மந்திரிகள் "ராவணேச்வரா! செய்திகொண்டு வந்த தூதனைச் சிறையிலடைப்பது நீதியல்ல. அவனைவிட்டு விடுங்கள் என்றனர். ராவணனும் அவ்வாறே செய்தான் மந்திரியும் தன் பரிவாரங்களுடன் சமுத்திரக்கரையை யடைந்து அன்றிரவு அங்கு தங்கி எவ்வாறு இக்காணிக்கையை வசூல்செய்வது என்ற யோசனையிலாழ்ந்தான்.

அன்றிரவு வழக்கம்போல் அந்தப்புரத்தை யடைந்த ராவணன், மண்டோதரியைப் பார்த்து மிகவும் ஏளனமாகவும், பரிஹாஸத்துடனும் "மண்டோதரி! இன்று தர்பாரில் ஒரு ரஸமான நிகழ்ச்சிஉண்டாயிற்று சக்வவேணன் என்றபெயருள்ளஒரு அற்பாயுளுள்ள அரசன் பாரதவர்ஷத்தில் இருக்கின்றானாம். அவனிடமிருந்து ஒரு தூதன் என்னிடம் வந்து $1\frac{1}{4}$ மணு தங்கம் காணிக்கை வாங்கிவரும்படி அனுப்பப்பட்டிருப்பதாகத்தெரிவித்தான். பார்த்தாயா இப்பூமண்டலத்திலுள்ள அனைவரிடமும் காணிக்கை வசூல்செய்யும் என்னிடம் காணிக்கையை எதிர்பார்க்கும் முட்டாள் அரசன் இன்னமும் இருப்பதை.. நான் அத்தூதனையும், அவ்வரசனையும் சிறைப்படுத்தியிருப்பேன்! நம்மந்திரிகளால் அவர்களுக்கு உயிர்ப்பிச்சை யளிக்கப்பட்டது. நானும் இதிலதிகமாக தலையிட்டுக்கொள்ளவில்லை" என்றான். இதைக்கேட்ட மண்டோதரி "பிராணநாயக! தாங்கள் இன்று ஒருபெரியதவறு செய்துவிட்டீர்கள் சக்வவேண மகாராஜனைப் பற்றி நிரம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரைப்போல சத்யசந்தரும் பிறர் நலங்களையே கோரும் அரசரும் வேறு ஒருவரும் கிடையாது. அந்த ராஜ்யத்தில் அமைதியும், சந்தோஷமும் தாண்டவமாடுகிறது. அவரை விரோதித்தவர் யாராகிலும் சரி அவர்கள் அழிவது நிச்சயம். ஆகவே அவர் கேட்ட அற்பமான $1\frac{1}{4}$ மணு தங்கம் நமக்குப்பிரமாதமானதல்ல. நமது நன்மைக்காக நாளைக்குள் அத்தூதனைத்தேடிக்கண்டுபிடித்து அவர் கேட்ட பொருளைக்கொடுப்பது மிகவும் முக்யமாகும். இல்லாவிடில், இதனால் ஏற்படும் நஷ்டம் மிக அதிகமாகும்" என்றாள். இதைக் கேட்ட ராவணன் "மண்டோதரி, வரவர உனக்கும் மூளை மழுங்கி

வருகிறது. அல்பாயுளுள்ள இந்த மானிட அரசனைக்கண்டு ஏன் உனக்கு இவ்வளவு பயம்? இந்த அரசன் வேண்டுகோளை நிராகரித்தால் என்ன ஆபத்து வந்துவிடும்! அதைப் பற்றிக் கவலையில்லை" என்று பரிகாசம் செய்யவே, மண்டோதரி, "நாளைக்காலையில் உங்களுக்கு அந்த சக்கவேண மஹாராஜரின் பெருமையைக்காண்பிக்கிறேன்." அப்போது நப்புவீர்கள், என்றாள்.

மறுநாட்காலை, மண்டோதரி ராவணனைத் தன் உப்பரிகையின் மேல்மாடிக்கு அழைத்துவந்து அங்கு வழக்கம்போல் தானியங்களை இறைத்தாள். புறாக்கள் பல அங்கு வந்து தான்யங்களைத் தின்னத்தொடங்கியது. அப்போது மண்டோதரி சிரித்துக்கொண்டே, "இப்போது பாருங்கள், உங்கள்மேல் ஆணையிட்டு இப்புறாக்கள் இத்தானியங்களைத் தின்னாமல் செய்கிறேன்."

(அடுத்த இதழில் முடிவுபெறும்)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மானிடன்- மானை- பார்வதியை, இடன்- இடப்பக்கத்தில் பெற்றவன். அர்த்தநாரீச்வர ஸ்வரூபன் தாங்கள் ஒருவரே. **தேய்மதியன்**- தேய்ந்த பிறைச்சந்திரனை தரித்தவன். ஒருசமயம் சந்திரனை தக்ஷர் சபித்து விட்டார். அக்காலத்தில் அவன் பரமேச்வரனை சரணமடைந்தான். அப்பொழுது அவனைத்தன் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு அவனுக்குள்ள குறைகளை நீக்கி அருள் புரிந்தார். இச்சொல்லால் இந்தப்பெருமை வெளியாகிறது. **பழைதருமாபரன்**- பழைமையாகிய பெரியமேலோன். தங்களுக்கு ஆதியும் அந்தமுமில்லாததால் தாங்கள் பழைமையானவர். தாங்களே மகான். எல்லோரையும் விடச்சிறந்தர், "புராண:, மஹாதேவ: விச்வாதி4க:" என்ற ஸம்ஸ்கிருத சொற்களால் ஆங்காங்கு ஸம்ஸ்கிருத நூல்களில் கொண்டாடப்படும் பரமனை "பழைதருமாபரன்" என்ற இந்த சொல்லும் குறிப்பிடுகிறது.

16-3-52 ஞாயிற்றுக்கிழமை மாலை 7-45 மணிக்கு நமது ஆசிரியர் திருச்சி ரேடியோ நிலையத்திலிருந்து தென்னாட்டு ஸம்ஸ்கிருத கவிகள் என்ற தொடர்பில் "ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர்" என்ற விஷயம் பற்றி தமிழில் ஓர் உபன்யாசம் செய்வார்.

விஷ்ணுமூலமாய் ஆக்ஞை அடைந்து ஸர்வஸாமக்ரியைகளையும்சேகரித்துக்கொண்டு, ரிஷிப்ரமுகர்களையும் தேவதைகளையும் வணங்கி நின்று வ்ருத்ராஸுரனைக் கொல்லப்போக உத்திரவுவேண்ட, அந்த ஸமயம் அந்த தேவதைகள் எல்லோரும் அவனுக்குஎன்ன மங்களவசனங்கள் சொன்னார்களோ அந்த மங்கள வசனங்கள் உனக்கும் பலிக்கட்டும் தவிர, பலிசக்ரவர்த்தியால் ஸ்வர்க்க பதவி அபஹரிக்கப்பட்டு வருந்தும் தேவேந்த்ரனுக்கு உதவி புரிவதற்காகவே ஜனித்த வாமனமூர்த்திக்குப் புறப்படும்பொழுது தாய் என்ன விசேஷ ஆசீர்வசனங்கள் சொன்னாளோ அவைகளெல்லாம் உனக்கும் பலிதமாகட்டும். தனயா! போய்வா, லக்ஷ்மணா! நீ ராமன் பின்னால் போகிற காரணத்தாலல்லவா கொஞ்சம் தைர்யமாயிருக்கிறது. நீ உன் தமயனையும் மதனியையும் கொடியகாட்டில் துன்பங்களொன்றும் நேராமல் மறுபடியும் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். அப்படிச்செய்து எனக்குப் புத்ர தானமும் புத்ரிதானமும் அளித்த பலனை யடைவாய். ஸீதே! தருணி! ஸ்நுஷேசக்ரவர்த்திகுமாரனென்றும் சக்ரவர்த்தி பதவிக்கு வருபவனென்றும் நம்பி ஜனகராஜன் உன்னை என் ராமனுக்கு அளித்தார். எப்பொழும் உனை மஹாப்ரியமாய் வளர்த்த மிதிலாதிபன் உள்ளங்கையில் வைத்துக்காப்பாற்றியபுத்ரியை என் மருமகளாய்க் கொடுத்தார். அப்படிப்பட்ட உன்னைக் கஷ்டப்படுத்தினால் ஜனகராஜன் கேட்டால் எப்படி வருந்துவார். அவருக்கு நாங்கள் என்ன அபராதம் செய்தவராவோம். இப்பொழுது அவர் மனம் தான் எப்படி தாங்குமிதை. நீ போவதை எப்படி நாங்கள் ஸஹிப்போம். போகவேண்டாமென்றும் சொல்லமுடியவில்லையே? உத்தமஸ்வபாவங்களுடன் தீர பதிவ்ருதையாய் உன் பதியுடன் கானகத்துக்கு போவதேஸரி. ஸுகுணங்களையுடைய இப்படிப்பட்ட மருமகளை அடைந்தும் எங்கள் அருகில் இருக்க நாங்கள் நல்ல நோன்புகள் நோற்று இருக்கவில்லை. எங்கள் வருத்தத்தை அந்த தெய்வந்தானறியும். எப்படியும் போவதாயிருப்பதால் போகத்தான் செய்வாய் நீ. எங்கள் கவலையை மறந்து விடு.

பதிவ்ரதாதிலகமாகும் உனக்கு நான் சொல்லவேண்டிய தர்மம் என்ன இருக்கிறது. ஜனகராஜன் உன்னை எங்களிடம் ஒப்புவித்தது போய், நாங்களிருவரும் எங்கள் பிரிய குமாரர்களை உன்னிடம் ஒப்புவிப்பது நிஜம். இவர்களை எப்படிக் காப்பற்றுவாயோ. வேளாவேளைக்கு போஜனமளித்து வேண்டிய உபசாரங்கள் செய்து எப்படி ரக்ஷிப்பாயோ. ஸீதா! மிதிலாபுரியிலிருந்து கொண்டு வந்தாயே ப்ரியமாய் கிளிகளை, அவைகளை எங்கே விட்டுப் போகிறாய். உனது பசியையுங்கூடக் கவனியாது அவைகளைப் போஷித்து வந்தாயே. ஆரண்யத்தில் ராமலக்ஷ்மணர்களை அந்தக்கிளிகளைப்போலவே நினைத்துக்கொள். போய்வா அம்மா. இந்தப்பதினான்கு வருஷம் எங்களை மறவாதே. இல்லை மறந்து விடு. (அழுகிறாள்)

த:- ஹா! கஷ்டம். ஸதீ மணிகளே! நீங்கள் எல்லோரும் புறப்படுங்கள் ஸுமந்த்ரா! ஊரிலுள்ளவர்களெல்லோரையம் ஆரண்யத்துக்குப் புறப்படச்சொல். சதுரங்க பலத்துடன் ஸர்வ ஸம்பத்துக்களுடன் நானும் போகிறேன். இந்தப்பாழும்

ஊரை பரதனே ஆளட்டும்.

கை:- ராஜேந்த்ரா! பாழும் ஊருக்கா பரதனுக்குப் பட்டங்கட்ட வரமளித்தீர்? வரங்களே தரவில்லை என்று சொல்லிவிடும். உம்முடைய ஊருடன் நீரே ஸுகமாயிரும்.

த:- ஹா! தெய்வமே!

ரா, ல, ஸீ:- (நமஸ்கரிக்கிறார்கள்)

ஸு:- குழந்தைகளே! மருமகளே நானென்ன சொல்லப்போகிறேன். அப்பா லக்ஷ்மணா! பதிவ்ரதா திலகமாய், சாபானுக்ரஹ ஸமர்த்தையாய் விளங்கும் கௌஸல்யா தேவியின் மங்கள ஆசீர் வசனங்களிருக்க உங்களுக்கென்ன குறைவு?

ரா:- கைகேயி மாதா! தாம் என்னை ஆசீர்வதியுங்கள்.

த:- ஹா! ஹா!! வேண்டாம்! வேண்டாம்!! இத்தனை ஆசீர்வாதமே போதாதா.

கை:- வரங்களளிப் பவர்களையும் பார்த்திருக்கிறேன். இந்தமாதிரி அழுவாரைக் கண்டதில்லை.

ரா:- வசிஷ்ட மஹரிஷியே! எங்களுக்கு ஆக்ஞையா?

(நமஸ்கரிக்கிறார்கள்.)

வசி:- ராமா! உன்னை நானென்ன ஆசீர்வாதம் செய்ய. நீ எங்கிருந்தாலும் அதுவே பரமபதம். துஷ்ட நிக்ரஹமும் சிஷ்ட பரிபாலனமும் கைக்கொண்டிருக்கும் உனக்கு க்யாதி ஏற்படட்டும்.

ரா:- ஸுமந்த்ரரே! இனிப்போகலாம் வாரும்.

(ராமன், லக்ஷ்மணன், ஸீதை இவர்கள் ஸுமந்த்ருடன் போகிறார்கள்.)

தச, கௌ, ஸு:- ஹா! ஜீவரத்னம் போய்விட்டதே.

(மூர்ச்சிக்கிறார்கள்)

(ப்ர:- நகர ஜனங்கள்)

ஜன:- எங்கே அந்தப்பாபி கைகேயி! அந்தப் படுக்காளி மந்தரையெங்கே? விவேக மில்லாத தசரத பூபதியெங்கே?

கௌ:- ஜனங்களே! இதென்ன இப்படி வந்தீர்கள்?

ஜன:- எங்கே அந்த மந்தரைப் பிசாசு படுக்காளிக் கைகேயிஎங்கே? தவிடு பொடியாக்கி விடுகிறோம். கல்லாலடித்துக் கொல்லுகிறோம்.

தச:- ஜனங்களே! கோரப் பாபி இதோ நான் இருக்கிறேன்.

ஜன:- அடி, உதை, வெட்டு, குத்து, கொல்லு.

ஒருவன்:- என்னய்யா, இந்த ராஜாவைக் கொன்று என்ன ப்ரயோஜனம்? வரங்களை யளித்து வருந்தி விழிக்கிறார். பாவி கைகேயியையும் மந்தரையையும் பிடித்து உதைக்கலாம் வா.

மற்றொருவன்:- எங்கே?எங்கே தேடிப்பிடித்துக் கண்டதுண்டம் ஆக்குவோம்.

வேறு ஒருவன்:- அடே, இந்த அறைக்குள் போய் த்தாள் போட்டிருக்கிறார்கள்.

"கதவை உடையடா, அவற்றை இடித்துத் தள்ளு" (என்று கூச்சல் செய்கிறார்கள்)

"அப்படியானால் அந்த வீட்டுக்குத் தீயை வைத்துவிடு எரிந்து போகட்டும்"

"வீட்டிலே அந்தத்தீ எங்கிருக்கிறதோ தேடுங்களடா! தேடிப் பாருங்கள்."

கௌ:- "ஜனங்களே! இதென்ன அராஜகம்? தண்டிப்பவர் யாருமில்லையா?

ஜன:- ராமர் போனபின் எங்களுக்கு யார் ராஜா? பேசவேண்டாம். அகப்பட்டவர்களையெல்லாம் கொல்லுவோம். சாகும்படி அடிப்போம்.

அடிடா, உதை, யாரானாலென்ன.

(திரும்பி ப்ரவேசம் லக்ஷ்மணன் அதி விரைவாய்)

ல:- ஜனங்களே! இங்கென்ன செய்கிறீர்கள்?

ஜன:- இதோபாரும் அக்னி. இந்த வீட்டுக்குத் தீவைக்கிறோம்.

ல:- போக்களிக்கிருந்து. இப்படி ஆக்ஞை இடுபவர்கள் உண்டா.

ஜன:- இவன் என்னடா பேசுகிறான்.

ல:- துஷ்டர்களே! என்ன? (என்று வில்லை எடுக்கிறான்)

(திரும்ப ப்ரவேசம் ஸ்ரீராமன்)

ரா:- லக்ஷ்மணா! இதென்ன வில்லெடுத்தாய். ஜனங்களே?

ஜன:- அடே ராமச்சந்த்ரர் பேசுகிறார் கேளுங்களடா, கேளுங்கள்.

ரா:- என்ன செய்கிறீர்கள் இங்கு?

ஜன:- கைகேயியையும் மந்தரையையும் கொளுத்தப்போகிறோம்.

ரா:- இத்தனை மாத்ரு த்ரோகிகளா நீங்கள்! போங்கள் சும்மா. ராஜனின் பார்யை உங்களுக்குத் தாயல்லவா.

ஜன:- தாய் ஆனாலும் விடமாட்டோம். தந்தை யானாலும் விடோம்.

ஒருவன்:- போடா ராமச்சந்த்ரரிடம் நாம் இப்படிப் பேசலாமாடா சும்மாயிருங்கள்.

ரா:- ஜனங்களே! உங்களுக்கு நமஸ்காரம்.

ஜன:- ஐயோ! ஐயோ!! (போகிறார்கள்)

ரா:- லக்ஷ்மணா! இப்படியே போய்விடலாம் அந்தப்பக்கம் போனால் தந்தையிருப்பார். தாமதம் ஏற்படும். (லக்ஷ்மணனுடன் போகுதல்) (ரதத்தின் மேலிருந்து) சுமந்தரரே! அதோ என் பிதா பின்னால் வருகிறாப்போலிருக்கிறது. ரதத்தை வேகமாய் விடும். (போகிறார்)

தச:- (பின்னாலிருந்து கௌசல்யா ஸுமித்திரையுடன்) ஸுமந்த்ரா! ஸுமந்த்ரா!! ரதத்தைநிறுத்து (உரக்கக்கூவி) ஐயோ! ரதம்போய் விட்டதே? எந்த புண்யாத்மாக்களாவது அதை நிறுத்த மாட்டார்களா? என் ராமனை எனக்களியார்களா? ஐயோ! அந்த ஸுமந்த்ரன் தான் எத்தனை துராத்மாவானான். எத்தனை வேகமாய் ஓட்டுகிறான். ரதம் எங்கேயும் கண்ணுக்குத் தென்படவில்லையே? ஐயா! ரதம் போவதானுண்டாகும் தூளியையும் காணவில்லையே, ராமா! ராமா!!

(கீழே விழுகிறார்)

கௌ, ஸு:- நாதா! (சைத்யோபசாரம் செய்ய,

தச:- கௌஸல்யா! ராமன் போய்விட்டானா? போய்விட்டானா ராமன்?

கௌ:- இதென்னவிதி? ஹா! திரும்பவோம்.

த:- எங்கே போக?

கௌ:- அதோ பாருங்கள்

கைகேயி அரண்மனை.

தச:- கைகேயி! கைகேயி!! யார் அந்த கைகேயி?

கௌ:- ஹா! தெய்வமே!!

தச:- கைகேயியின் அரண்மனைக்கா? வேண்டாம்! வேண்டாம்!! உன் க்ரஹத்துக்கேக்கூட்டிப்போ.

(திரை விழுகிறது)

அங்கம் III காக்ஷி 1 இடம்:- கைகேயி அரண்மனை. பா:- மந்தரை

மந்:- அப்பாடா இப்பொழுதுதான் பிழைத்தேன். அதுவும்கௌசல்யையின் அருளால். அவள் அருள் இல்லையானல் அந்த லக்ஷ்மணன் என்னைக் கொன்றே இருப்பான். இந்த ஊர் வம்பர்களெல்லோருமே நானிருந்த இடத்துக்கே தீ வைக்க வந்து விட்டார்கள். இந்தக்கழுதைகள் எல்லோரும் ராமன் பின்னலேயே பாழாய்ப் போய்விட்டார்களென்று தெரியும்வரை நானும் கைகேயியும் வெளியிலே வரமுடியவில்லை. என்ன ஆனல் என்ன? காரியம் என்னவோ முடிந்துவிட்டதல்லவா? இனிமேலே இங்கிருந்தால் அபாயந்தான். கிரிவ்ராஜபுரத்துக்கே போய்விடுகிறேன். போவேஎயா வேண்டாமா என்று யோஜித்துக் கொண்டிருந்தேன். பால் சாப்பிடவா? பாயஸம் புஜிக்கவா? இப்பொழுதே போனல் நிச்சயமாய் கொளுத்தி விட்ட மாதிரியாகத்தான் ஆகும். பால் மாத்திரம் சாப்பிட்டதுபோல்தான் இங்கே இருந்து பரதன் ராஜ்ய பரிபாலனம் செய்யும்பொழுது கைகேயிக்குப்பதில் ஸர்வாதிகாரம் பெற்று [illegible] நடத்தும் என்னைத் திட்ட [illegible] டுவந்த இந்த அயோத்தி [illegible] லாம் பிடித்து உதைத்து வருத்தினுலல்லவா எனக்குப் பாயஸம் அருந்தினது போலாகும். ஆனல் பரதன் எதாவது கைகேயிமேல் கோபங்கொண்டால் அப்பொழுது பாயஸமெல்லாம் விஷமாய் மாறிவிடும். என்ன செய்வது? இதற்கு அப்படி ஏன் மாறும்? பரதன் என்ன மனுஷ்யன் தானே. ஆரம்பத்தில் ஒருவேளை வருத்தப்பட்டாலும் ஏகசக்ராதிபதியாய் சக்ரவர்த்தி பதவியடைந்ததற்கு ஸந்தோஷம் இல்லாமற் போகுமா? அப்படி ஸந்தோஷப்படும் ஸமயத்தில் இந்தப்பாக்யத்தை அளித்ததற்குக் கைகேயியை மெச்சாதிருப்பானு மெச்சும் பொழுது அத்தக் கைகேயி இந்த மந்தரையின் உபாயமே தன்னை இந்தஸ்திதிக்குக் கொண்டுவந்தது என்று சொல்லாமலிருப்பாளா? அப்பொழுது நான் எவ்வளவுகீர்த்திவாய்ந்தவளாவேன் பரதனும் எப்பேர்பட்ட ராஜ்ய கார்யமானலும் என்னை ஆலோசிக்காமலிருப்பானு? பரதன் என்ன? நான்தானே ராஜ்யம் ஆளப்போகிறேன் அப்பொழுது. ஆனல்-பரதன் மேல் - எனக்கிப்பொழுது - ஏதோ ''மோஹம்'' எற்பட்டிருக்கிறது. இங்கொருவரும் ஒளிந்து கேட்கவில்லையே? ஆம் எற்பட்டிருக்கிறது என் அபீஷ்டத்திற்கு பரதனிடமிருந்து ஸரியான பதில் கிடைத்தாலும் கிடைக்கலாம். ரூபமில்லாத போனலும்புத்திக்காக விரும்பானு? நான் என்ன கொஞ்சம் வயசு ஆனவள் தானே. ஆனல் என்ன? எந்த புற்றில் எந்தப்பாம்புஇருக்குமென்று யார் அறிவார்? ஆகவே நான் அவனுக்கு ஸந்தோஷ சமாசாரமெல்லாம் எழுதித்தெரியப்படுத்தி இருக்கிறேன். [illegible] எனது அபீஷ்டம் நிறை வேற [illegible] இன்னும் என்ன வேண்டும்.

199863
[illegible] 5-5

ஸ்ரீ. நாம ராமாயணம்.

த்யானம்

கல்யாணாநாம் நிதா3நம் கலிமல மத2நம் ஜீவநம் ஸஜ்ஜநாநாம்
பாதே2யம் யந்முமுக்ஷோ: ஸபதி3 பரபத3 ப்ராப்தயே ப்ரஸ்தி2தஸ்ய!
விச்1ராமஸ்த2ாநமேகம் கவிவரவசஸாம் பாவநம் பாவநாநாம்
பீ3ஜம் த4ர்மத்3ருமாணாம் ப்ரப4வது ப4வதாம் பூ4தயே ராமநாம!!

பாலகாண்டம்

சு1த்3த4 ப்ருஹ்ம பராத்பர	ராம்
காலாத்மக பரமேச்வர	ராம்
சேஷதல்பஸுக2 நித்3ரித	ராம்
ப்ரஹ்மாத்3ய மரப்ரார்தி2த	ராம்
சண்ட3கிரணகுல மண்ட3ந	ராம்
ஸ்ரீமத்3 த3சரத2 நந்த3ந	ராம்
கௌஸல்யாஸுக2வர்த்த4ந	ராம்
விச்வாமித்ர ப்ரியத4ந	ராம்
கோ4ரதாடகாகா4தக	ராம்
மாரீசாதிநிபாதக	ராம்
கௌசிகமக2ஸம்ரக்ஷக	ராம்
ஸ்ரீமத3ஹல்யோத்3த4ாரக	ராம்
கௌ3தமமுநிஸம்பூஜித	ராம்
ஸுரமுநிவரக3ணஸம்ஸ்துத	ராம்
நாவிகத4ாவிதம்ருத3பத3	ராம்
மிதி2லாபுரஜந மோஹக	ராம்
விதே3ஹமாநஸரஞ்ஜக	ராம்
த்ர்யம்பககார்முகப4ஞ்ஜக	ராம்
ஸீதார்பிதவரமாலிக	ராம்
க்ருதவைவாஹிக கௌதுக	ராம்
பார்க3வதர்ப விநாசக	ராம்
ஸ்ரீமத3யோத்4யாநக3தக	ராம்

அயோத்யாகாண்டம்

அக3ணிதகு3ணக3ணபூ4ஷித	ராம்
அவநீதநயாகாதமி3த	ராம்
ராகாசந்த்ரஸமாநந	ராம்
பித்ருவாக்யாச்1ரிதகாநந	ராம்
ப்ரியகுஹவிநிவேதி3தபத3	ராம்
தத்க்ஷாலிதநிஜம்ருது3பத3	ராம்
ப4ரத்வாஜமுகாநந்த3க	ராம்
சித்ரகூடாத்3ரிநிகேதந	ராம்
த3சரத2ஸந்ததசிந்தித	ராம்
கைகேயீதநயார்தி2த	ராம்
விரசிதநிஜபித்ருகர்மக	ராம்
ப4ரதார்பிதநிஜபாது2க	ராம்

ஆரண்யகாண்டம்

த3ண்ட3காவந ஜநபாவந	ராம்
து3ஷ்டவிராத5விநாசந	ராம்
சரப3ங்கஸுதீக்ஷ்ணார்சித	ராம்
அகஸ்த்யாநுக்ரஹவர்தி4த	ராம்
க்3ருத்4ராதி4பஸம்ஸேவித	ராம்
பஞ்சவடீதடஸுஸ்தி2த	ராம்
சூர்பணகா2ர்திவிதா2யக	ராம்
க2ரதூ3ஷணமுக2ஸூத3க	ராம்
ஸீதாப்ரியஹரிணாநுக3	ராம்
மாரீசார்திக்ருதா3சுக3	ராம்
விநஷ்டஸீதாந்வேஷக	ராம்
க்3ருத்4ராதி5பக3திதா3யக	ராம்
ச1ப3ரீத3த்தப2லாசந	ராம்
கப3ந்த4பாஹுச்சேதந	ராம்

கிஷ்கிந்தாகாண்டம்

ஹநுமத்ஸேவிதநிஜபத3	ராம்
நதஸுக்ரீவாபீஷ்டத3	ராம்
க3ர்விதவாலிஸம்ஹாரக	ராம்
வாநரதூ3தப்ரேஷக	ராம்
ஹிதகரலக்ஷ்மணஸம்யுத	ராம்

ஸுந்தரகாண்டம்

கபிவரஸந்ததஸம்ஸ்ம்ருத	ராம்
தத்க3திவிக்4நத்வம்ஸக	ராம்
ஸீதாப்ராணாத4ாரக	ராம்
து3ஷ்டதசாநநதூ3ஷித	ராம்
சிஷ்டஹநுமத்பூ4ஷித	ராம்
ஸீதாவேதி5த காகாவந	ராம்
க்ருதசூடாமணிதர்சந	ராம்
கபிவரவசநாச்1வாஸித	ராம்

யுத்தகாண்டம

ராவண நித4நப்ரஸ்தி2த	ராம்
வாநரஸைந்ய ஸமாவ்ருத	ராம்
சோஷித ஸரிதீ3சார்தி2த	ராம்
விபீ4ஷணாப4ய தாயக	ராம்

(அடுத்த இதழில் முடிவடையும்)

511
MAR 1952
MADRAS

உங்கள் தேவைக்கு

நம்பிக்கையும், நாணயமும் உள்ள

எங்கள் கடை

1812-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

தகுதியான இடம் :—

B. S. ஜோஷி & பிரதர்ஸ்.

மேலராஜவீதி, தஞ்சாவூர்.

உயர்ந்த ரக பட்டு, நூல் ஜவுளி ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.

Printed by Sri V. S. Rajagopalan, B.A., B.L, at the Mannargudi Press Ltd, Mannargudi & Title page printed at the Wallace Printing House, Tanjore. Editor & Publisher :— R. Muthukrishna Sastrigal, 1835/3, West Main Street, Tanjore.